GOKULAM

கோகுலம்

ரூ.6/-

ஆகஸ்ட் 2004



ஒலிம்பிக் போட்டி; உங்களுக்குப் பரிசு!


தாய்மண்ணே வணக்கம்!

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்






அட்டையில் : அஜய்
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

ஆகஸ்ட் 2004 மலர் : 22 இதழ் : 7

கோகுலம்


*உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்*



செய்தி நேரம்

டைட்டானில் தண்ணீர்!

9 லட்சம் ஆண்டுகளுக்கு முன்...



• சனி கிரகம்



• சதாம் ஹுசைன்

கென்யாவில் 9 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதனைப் போன்ற உருவம் கொண்ட உயிரினம் வாழ்ந்ததற்கான தடயங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கென்யா நாட்டு விஞ்ஞானிகள் கென்யாவில் வரலாற்றுக்கும் முந்தைய இடமான ஓலோ கெஸலி என்ற இடத்தை ஆய்வு செய்து வருகின்றனர். இங்கு உடைந்த மண்டை ஓட்டின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 9 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்த மனிதனைப் போன்ற உயிரினம் என்றும், இது மனிதனின் மூதாதையராக இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த மண்டையோட்டுக்குச் சொந்தக்காரர் வேட்டைக்காரர் என்றும் புல்வெளியில் வாழ்ந்தவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

சதாம் விசாரணை

ஏழு மாதங்களுக்கு முன்பு கைது செய்யபட்ட சதாம் ஹுசைன் ஈராக்கில் பதவியேற்ற புதிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் மீதான விசாரண்ணை தொடங்கியுள்ளது. விசாரணையில் "புஷ் தான் உண்மையான குற்றவாளி, குவைத் மீது போர் தொடுத்தது நியாயமானதே. ஈராக் மக்களின் நன்மைக்காக இந்தப் போரைத் தொடுத்தேன்" என்று கூறினார். அத்துடன் தனக்கு எதிரான குற்றச்சாட்டு அடங்கிய பட்டியலில் கையெழுத்திட சதாம் மறுத்து விட்டார்.

சனியை நெருங்கியது காசினி

சனி கிரகத்தை வட்டமிடும் காசினி விண்கலம், துணைக் கோளான டைட்டான் அருகே சென்று அதைப் பற்றிய தகவல்களை வெளியிட்டு வருகிறது. அது தற்போது சனி கிரகத்தை நெருங்கி அதன் துணை கோள்களைப் பற்றியும், வளையங்களைப் பற்றியும் ஆராய்ந்து வருகிறது. டைட்டானில் எரிமலைகளும், மலைகளும் நிறைந்துள்ளதாகவும், தண்ணீர் உறைந்த நிலையில் காணப்படுவதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அழ.வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டி முடிவு



2004ஆம் ஆண்டுக்கான சிறுகதைப் போட்டியில் வாசகர்கள் நிறையப் பேர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கோகுலம் ஆசிரியருடன் பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஜி.எஸ். சுப்பிரமணியம் அவர்களும் நடுவராக இருந்து பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு: சொட்டு நீர்ப் பாசனம்
எஸ். கவிதா,
ஸ்ரீ ஜெயேந்திரா பள்ளி, திருநெல்வேலி -11

இரண்டாம் பரிசு: தகுதி யாருக்கு?
கே.பரத், ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி,ஒசூர்

மூன்றாம் பரிசு: உண்மை அன்பு!
எம்.பி. ராஜேஷ்கன்னா,
வி.மன்னார் பாளையம், சேலம் மாவட்டம்

தண்ணீர் தெளிப்பது ஏன்?

ஜோக்ஸ் கார்னர்



''இளநீர் விக்கறவர் கிட்ட விலையைக் குறைச்சு கேட்டிருக்கலாமேடா?''

''கையிலே அரிவாள் வெச்சிருக்காரேடா!''

- அருண் சித்தார்த், பத்தாம் வகுப்பு, ஜவகர் பள்ளி, நெய்வேலி



- அனுராதா ராஜப்பா, வத்தலக்குண்டு

''சாப்பிட்ட கையோட எதுக்கு முகத்துல தண்ணீர் தெளிக்கிறீங்க?''

''பில்'லைப் பார்த்து மயங்கி விழாம இருக்க!''

- தமிழ்நாயகி, சேலம்





''நான் எப்போ வெளியில போனாலும் என்னை முழுசா கவர் பண்ணிட்டுதாண்டா போவேன்.''

''ஏண்டா அப்படி?''

''எங்க அம்மாதான் என்னை அறிவு கொளுந்துன்னு சொன்னாங்க. ஒரு வேளை நான் வெளில போகும்போது என்னை ஆடோ, மாடோ சாப்பிட்டுட்டா?''

- எஸ். திலகவதி, வெஸ்லி மெட்ரிக் பள்ளி, பாண்டிச்சேரி

''எங்கப் பாட்டி சின்ன விஷயத்துக்கெல்லாம் எங்கம்மாக்கிட்டே சண்டை போடுவாங்கடா...!''

''போடா... எங்கப் பாட்டி விஷயமே இல்லாமே சண்டைப் போடுவாங்கத் தெரியுமா...?''

- தஞ்சை மா. ஷண்முகராஜா பசுபதிகோவில்





சொட்டு நீர்ப் பாசனம்

☺ எஸ்.கவிதா ☺

பன்னிரண்டாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திரா பள்ளி, திருநெல்வேலி

பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பாவிடம் சுரேஷ் தயங்கித் தயங்கி வந்து நின்றான்.

"என்னடா சுரேஷ்? என்ன விஷயம்?"

"புராகிரஸ் ரிப்போர்ட்ல நீங்க கையெழுத்துப் போடணும்" என்றபடியே நீட்டினான் சுரேஷ்.

அப்பா ஆர்வமாக வாங்கிப் பார்த்தார். சட்டென்று அவர் முகம் வாடியது. பல மதிப்பெண்களின் அடியில் சிவப்பு மை அடிக்கோடு போடப்பட்டிருந்தது. மற்ற அப்பாக்கள் என்றால் இந்நேரம் கோபப்பட்டிருப்பார்கள். ஆனால் சுரேஷின் அப்பா எப்பொழுதும் அமைதியாகவே அணுகுவார்.

"என்னடா சுரேஷ், மார்க் இவ்வளவு குறைஞ்சிருக்கு? உடம்பு எதுவும் சரியில்லையா? பாடம் புரியலையா? டியூசன் ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா. எதிர்பார்க்காத கேள்விகளாக நிறைய வந்துருச்சு. அதான்..."

"எல்லா கேள்விகளையும் படிக்கணும். முக்கியமான கேள்விகளை நம்பி, தேர்வுக்குப் போறதே தப்பு."

சுரேஷ் பதில் பேசாமல் நின்றான்.

"சரி, அடுத்த முறை நல்லா முயற்சி பண்ணு. எட்டாம் வகுப்பு வரை நல்லா தானே படிச்சிட்டிருந்தே! ஒன்பதாம் வகுப்பில் தான் இப்படி பண்ணறே..." என்றபடி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார் அப்பா.

"இவன் கேட்கறதையெல்லாம் உடனே வாங்கிக் கொடுத்துடறீங்க. அளவுக்கு அதிகமா பாக்கெட் மணியும் கொடுக்கறீங்க. அப்படியிருந்தும் ஒழுங்கா படிக்கிறானா பாருங்க" என்றபடி வந்தார் அம்மா.

நண்பர்கள் அந்த நேரம் வர, சுரேஷ் வேகமாக சைக்கிளை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு கிளம்பினான்.

"ஏண்டா சுரேஷ் ஒரு மாதிரி இருக்கே?"

"புரோக்ரஸ் கார்டை அப்பா பார்த்தார்..."

"என்ன, பயங்கரமாகத் திட்டினாரா? இதையெல்லாம் காதில் வாங்கிக்கக் கூடாதுடா. உன் நண்பர்கள் எவ்வளவு பேர் உனக்கு இருக்கோம். கவலைப்படாதே!" என்றான் ஒருவன்.

"சுரேஷ், இன்னிக்கு எல்லாருக்கும் ஐஸ் கிரீம் வாங்கித் தர்றே. கவலையை விட்டு விட்டு ஜாலியா இருக்க கத்துக்க" என்றான் இன்னொருவன்.

"இல்லடா. எனக்கே சரியா படிக்கலைன்னு தெரியுது. ஆனால் அது எதனாலேன்னு மட்டும் தெரியலை.."என்றான் வருத்தத்துடன் சுரேஷ்.

ஒரு மாதம் கழித்து "சுரேஷ் வர்ற சனி, ஞாயிறு உனக்கு லீவுதானே?"

"ஆமாம்ப்பா. எதுக்கு கேட்கறீங்க?"

"என் நண்பனின் கிராமத்தில் திருவிழாவாம். ரெண்டு நாள் அங்கே தங்கிட்டு வரலாம்."

முதல் நாள் விருந்தும், திருவிழாவுமாக நாள் இனிமையாகக் கழிந்தது. மறுநாள் காலை அப்பாவின் நண்பர் வயலுக்குக் கிளம்பினார்.

"மாமா, நானும் உங்க கூட வயலுக்கு வர்றேன்" என்றான் சுரேஷ்.

"வா, சுரேஷ், உனக்கும் பொழுது போகும்" என்றபடி அவனை அழைத்துச்


அழ. வள்ளியப்பா
நினைவு சிறுகதைப்
போட்டியில்
முதல் பரிசு பெற்ற
கதை

சென்றார்.

விவசாய முறைகள் எல்லாம் மாறிப் போயிருந்தன. எங்கும் பி.வி.சி. குழாய்கள், இயந்திர மோட்டார்கள் என விஞ்ஞான வளர்ச்சிகள் தென்பட்டன.

சின்னச் சின்ன டியூப்களில் இருந்து சொட்டுச் சொட்டாக நீர் செடிகளின் வேருக்கு அருகே விழுந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த சுரேஷுக்கு ஆச்சரிய மாக இருந்தது. "என்ன மாமா, இப்படி தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கு?" என்று கேட்டான்.

"என்னப்பா இது உனக்குத் தெரியாதா? இதுக்குப் பெயர்தான் சொட்டு நீர்ப்பாசனம்."

"இந்தக் கிராமத்துலதான் தண்ணீர் நிறைய இருக்கே மாமா. அதைத் தாராள மாகப் பயன்படுத்தலாமே?" -சுரேஷ்.

"நம்மகிட்ட ஒரு பொருள் நிறைய இருக் குங்கிறதுக்காக அளவுக்கு அதிகமாகச் செல வழிக்கக் கூடாது. நாட்டில் எவ்வளவு தண்ணீர்க் கஷ்டம்? தண்ணீரைச் சிக்கன மாக செலவு செய்தால் நாட்டுக்கும், வீட்டுக் கும் நல்லது தானே! செடிகளுக்கு நிறையத் தண்ணீரைப் பாய்ச்சினால் செடிகளைச் சுற்றி, அதிக களைகள்தான் முளைக்கும். அதனால தண்ணீரும் வீணாகும்; செடியும் வீணாகும்" என்று விளக்கம் கூறிக் கொண்டே நடந்தார்.

'தண்ணீர் அதிகமானால் களைகள் முளைக்கும்' என்ற வார்த்தைகளைக் கேட்டு சுரேஷ் ஒரு நிமிடம் நின்றான்.

'என்னோட கவனம் படிப்புல குறைய றதுக்குக் காரணம் அளவுக்கு அதிகமான நண்பர்கள்தான். என்கிட்ட பணம் அதிக மிருக்கிறதும் நண்பர்கள் சேர ஒரு காரணம். என்னுடைய நேரம் எல்லாம் நண்பர்களுடன் செலவாகிடறதாலே என்னால படிப்புல கவனம் செலுத்த முடியலை... காரணம் புரிஞ்சிருச்சு. இனி நானும் சொட்டு நீர்ப் பாசனத்தைக் கையாள்வேன்.'

"என்னடா சுரேஷ் அப்படியே நின்னுட்ட? வா, குளிச்சிட்டு சாப்பிடப் போகலாம்" என்றார் மாமா.

சுரேஷ் சந்தோஷமாய் பின் தொடர்ந் தான்.

உலக அதிசயங்களைக் கண்டுபிடியுங்கள்!

- கோடை விடுமுறைப் போட்டி II முடிவு

ஜூன் இதழில் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டி மிகவும் சுலபமாக இருந்திருக்கிறது. கலந்து கொண்டவர்கள் அனைவரும் சரியான விடை அளித்திருந்தனர். எனவே குலுக்கல் முறையில் பத்து பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூ.20/- பரிசு பெற்றவர்கள்:

1. ஐ. ஜெயமுருகன், திருபட்டினம், புதுவை மாநிலம்
2. மோ. திவ்யபாரதி, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்
3. என். கோகிலவாணி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்
4. பி. நிஷாந்தி, கல்பாளையம், சென்னை
5. கே. புரட்சி செல்வன், சிறுகடம்பூர்
6. அ.சுபபிரகாஷ், தூத்துக்குடி
7. வெ. நாகலஷ்மி, தேனி
8. அ. கணேஷ், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்
9. ச. ஜுமானா ஹஸீன், இராமநாதபுரம்
10. ரா.விஷ்ணு வர்த்தனா, மதுரை




சரியான விடை:

1. சீனப்பெருஞ்சுவர்
2. தாஜ்மஹால் 3. பைசா நகர சாய்ந்த கோபுரம் 4. ஈஃபிள் டவர்,
5. எம்பயர் ஸ்டேட் பில்டிங் 6. லிபர்டி சிலை 7. பிரமிடுகள்
8. ஓபேரா தாமரைக் கோயில் 9. பிக்பென் கடிகாரம்,
10. லண்டன் பாலம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கோகுலம் சந்தா செலுத்தினால் காஸெட் இலவசம்!



உங்கள் கோகுலத்துக்கு சந்தா செலுத்தினால் கதை கேட்டுக் கொண்டே இருக்கலாம். பிரபல எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள் குழந்தைகளுக்காக சொன்ன கதைகள் அடங்கிய காஸெட்டை இலவசமாகப் பெற்றிடலாம்.

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐
* ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐
* உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

நண்பரின் பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097



தண்ணீர்...

எழுபது சத வீதம் நீரினால் நிறைந்தது நம் பூமி. இதில் 97% நீர் கடல் நீர். 3% நீரைத்தான் நாம் பயன்படுத்த முடியும். நாளுக்கு நாள் தண்ணீரின் தேவை அதிகரித்து வருகிறது. ஆனால் மழை குறைவு, பூமியின் வெப்ப நிலை உயர்வு போன்ற காரணங்களால் தண்ணீர்ப் பிரச்னை விஸ்வரூபம் எடுத்து வருகிறது. 'அடுத்த உலகப் போர் தண்ணீருக்காக நடக்கும்' என்று சொல்கிறார்கள்.

சரி, கிடைக்கிற தண்ணீராவது சுத்தமாக இருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை என்றுதான் சொல்ல முடியும். நமக்கு வரக்கூடிய பல்வேறு நோய்கள் 'பாதுகாப்பான குடிநீர்' கிடைக்காததால்தான் ஏற்படுகிறது. தூய்மையான தண்ணீரின் அவசியத்தை மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

இப்போது நகரவாசிகளில் பெரும்பாலோர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைத்தான் அதிகம் பயன்படுத்துகின்றனர். நோய் வந்து அவஸ்தைப் படுவதை விட பணம் கொடுத்து பாதுகாப்பான தண்ணீரை வாங்கத் தயாராக இருக்கின்றனர்.

• மணல் வடிகட்டி, கார்பன் பில்டர்...





தண்ணீரை எப்படி பாதுகாப்பாக குடிநீராக மாற்றுகிறார்கள் என்று அறிய சென்னையை அடுத்துள்ள ஸ்ரீபெரும்புதூர் அருகில் தொடுக்காடு கிராமத்தில் இருக்கும் சபோல் குடிநீர் ஃபேக்டரிக்கு ஒரு விசிட் செய்தோம்.

அதிதி, தேவி பிரசாத், ரச்னா, அவந்திகா மற்றும் மதுஸ்ரீ ஆகியோரும் இந்த விசிட்டில் பங்கேற்றனர்.

நகரத்தைத் தாண்டி இருபுறமும் மரங்கள் சூழ பல கிராமங்களைக் கடந்து ஒருமணி நேரப் பயணத்தின் முடிவில் தொழிற்சாலைக்குள் நுழைந்தோம். சபோல் நிர்வாகிகள் நம்மை வரவேற்றார்கள்.


எங்கள் காலணிகளைக் கழற்றி விட்டு

தண்ணீர்...



அவர்கள் கொடுத்த காலணிகளையும், தொப்பிகளையும் மாட்டிக் கொண்டோம். வெளியில் பிரம்மாண்டமாகத் தெரிந்த







தொழிற்சாலையின் உள்ளே ஆயிரக் கணக்கானவர்கள் பணிபுரிவார்கள் என்று நினைத்தால், ஏமாற்றம்தான்!

பெரிய அறைகளில் ஒன்றிரண்டு ஆட்கள் மட்டுமே வேலை செய்து கொண்டிருந்தார்கள். மொத்தம் 23 தொழிலாளர்களைக் கொண்டே இது இயங்குகிறது. பெரும்பாலான வேலைகளை இயந்திரங்களே செய்து முடித்து விடுகின்றன!

Water plant மானேஜர் விளக்கினார்: ''நிலத்திலிருந்து போர் மூலம் தண்ணீரை எடுத்து கான்கிரீட் டேங்கில் நிரப்புவோம். இது 75,000லிட்டர் கொள்ளளவு கொண்டது. அங்கிருந்து தண்ணீர் sand filters எனப்படும் இயந்திரத்துக்குள் அனுப்பப்படும். அதில் மணல், சிறு கற்கள், பெரிய கற்கள் என்று வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். அதன் வழியே தண்ணீர் வரும்போது சுத்தம் செய்யப்படுகிறது.

''அதற்கடுத்து தண்ணீரில் உள்ள வாசனையை நீக்குவதற்கு Activated Carbon Filterகளைப் பயன்படுத்துகிறோம். இதுல தண்ணீரில் இருக்கும் தேவையில்

• இறுதிக் கட்டத்தில் தண்ணீர் கேன்



மதுரை நகரப் பள்ளிகள் ஸ்பெஷல்!



செப்டெம்பர் கோகுலம் மதுரையில் உள்ள இரண்டு பள்ளிகளைச் சேர்ந்த மாண வர்களின் ஸ்பெஷலாக மலர உள்ளது.

இடம் பெறும் பள்ளிகள்:

1. டால்ஃபின் மெட்ரிகுலேஷன் பள்ளி, பைபாஸ் சாலை, மதுரை.

2. சௌராஷ்ட்ரா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காமராஜர் சாலை மதுரை.

லாத வாசனை எல்லாம் நீங்கி விடும். அப்புறம் தண்ணீர் pesticidal polisher வழியே சென்று சுத்தமாகிறது.

"தண்ணீர் சுத்தமாகி விட்டதா?"

"அதற்குள் எப்படி? இன்னும் பல நிலைகள் உள்ளன. கண்ணுக்குத் தெரியாத தூசிகளையும் அகற்றும் மைக்ரோன் ஃபில்டர். இதில் உள்ள வடிகட்டியின் அளவு 5 மைக்ரான். மிகவும் நுண்ணிய தூசி, கிருமிகளைக் கூட இது வடிகட்டி விடுகிறது. பிறகு 'ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் சிஸ்டம்' மூலம் தண்ணீர் செல்லும். அப்போது தேவையற்ற உப்புகள் தனியாகப் பிரிந்து கழிவுப் பகுதிக்குச் சென்று விடும்."

ஒரு மணி நேரத்தில் 15,000 லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கலாம். அதில் 11,000 லிட்டர் தண்ணீரே சுத்தமான நீர். மீதி 4000 லிட்டர் தண்ணீர் கழிவாக மீண்டும் நிலத்துக்கே விடப்படுகிறது.

இதன் பிறகு தண்ணீர் அல்ட்ரா வயலட் ஸ்டெர்லைஸர்க்கு செல்கிறது. அங்கு பாக்டீரியா, பூஞ்சை, காளான், வைரஸ் போன்றவை அழிக்கப்படுகின்றன. அங்கிருந்து ஓஸோனேட்டருக்குப் பயணிக்கும் நீர் வேதிச் செயல்பாடுகள் மூலம் மீண்டும் எந்த பாக்டீரியாவும் வளராமல் இருக்கும் அளவுக்கு மாற்றப்படுகிறது. இறுதியாக தண்ணீர் சேமிக்கும் கொள்கலனில் சேமித்து வைக்கப்படுகிறது."

நீண்ட பயணத்துக்குப் பின் தண்ணீர் சுத்தமானதை பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

"இப்பொழுதுதான் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர். முன்பெல்லாம் காய்ச்சி வடிகட்டினாலே தண்ணீர் சுத்தமாகி விடும் என்றார்களே?"

"அப்பொழுது டெக்னாலஜி வளர்ச்சியடையவில்லை. அதனால் காய்ச்சியாவது குடித்தால் போதும் என்றார்கள். இன்று தொழில் நுட்பம் வளர்ந்து விட்ட நிலையில் அதையே செய்வது சரியா?" என்கின்றனர்.

அடுத்து சேமிப்புக் கலனிலிருந்து தண்ணீர் பேகிங் ஏரியாவுக்கு அனுப்பப் படுகிறது. அங்கு 20 லிட்டர் அளவுடைய கேன்கள் 11 முறை சுத்தம் செய்யப்பட்டு வரிசையாக அணிவகுத்து நின்றன. இந்த இடங்களில் மட்டுமே மனிதர்களின் சேவை இருக்கிறது.

கேன்களில் தண்ணீர் நிரப்பப்பட்டு, மூடப்படுகிறது. அங்கும் நீர் பரிசோதிக்கப்பட்டு, பிறகு சீல் செய்யப்படுகிறது. இந்த இடத்தில் விலை, உற்பத்தி செய்த நாள், எவ்வளவு நாட்கள் வரை பயன்படுத்தலாம் போன்ற தகவல்களைச் சின்ன லேபிளில் ஒட்டி விடுகின்றனர்.

சீல் செய்யப்பட்ட கேன்கள் அடுக்கி வைக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்த கேன் தண்ணீரை ஒரு மாதம் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். சுத்திகரிக்கப்பட்ட நீரும் தொழிற்சாலையில் இருக்கும் மைக்ரோபயாலஜி, வேதியியல் கூடங்களில் சோதனை செய்யப்படுகிறது.

சபோல் நிறுவனம் சென்னையில் துவங்கி சில மாதங்கள்தான் ஆகின்றன. இங்கு கேன் தண்ணீர் மட்டுமே செய்யப்படுகிறது. இதன் தலைமை நிறுவனம் கோயம்புத்தூரில் ஐந்து ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அங்குதான் பல அளவு பாட்டில்களில் தண்ணீர் நாடெங்கும் அனுப்பப்படுகிறது. பாட்டில் நீரை 6 மாதங்கள் வரை (திறக்காமல்) பயன்படுத்தலாம்.


மாசு நிறைந்த நம் நாட்டில் சுத்தமான தண்ணீர் அருந்துவது அவசியம்தானே!

- விஸ்வேஸ்

படங்கள்: எஸ். சுஜாதா

பலசாலி!

கதை: அவந்திகா
படம்: பிள்ளை





ஒலி மாசுபாடு


ஒலி மாசுப்பாட்டை ஒரு பொருட்டாகவே யாரும் கருதுவதில்லை. அதிக ஒலியைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தால் நமது கேட்கும் சக்தி குறைந்து கொண்டே வரும். செவிப்பறை செல்கள் ஒருமுறை பாதிப்படைந்தால் மீண்டும் அதைச் சரி செய்யவே முடியாது.

அமைதியான வீடு - 20 டெசிபல்	கத்திப் பேசும் போது - 100 டெசிபல்
சாதாரணப் பேச்சு - 40 டெசிபல்	பேருந்து ஹாரன் - 100 டெசிபல்
தொலைபேசி மணி - 60 டெசிபல்	ஸ்பீக்கர் பாடல் - 120 டெசிபல்

85 டெசிபலுக்கு மேல் ஒலி நம் காதை அடைந்தால் நிச்சயம் கேட்கும் தன்மையை இழக்க ஆரம்பிக்கும். ஒலி மாசுப்பாட்டைத் தவிர்ப்போம். ஆரோக்கியமான உடல் நிலையைப் பெறுவோம்.

திண்டுக்கல்
எஸ்.எம்.பி.எம்
பள்ளி
ஸ்பெஷல்

வெள்ளி விழாவை நோக்கி...



* தாளாளர்



* முதல்வர்

திண்டுக்கல் நகரில் புகழின் உச்சியில் வீற்றிருக்கும் பள்ளிகளுள் ஒன்றான எஸ்.எம்.பி. மாணிக்க நாடார் பாக்கியத்தம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கல்வியிலும், தரத்திலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து மெட்ரிக் பள்ளியாக 1994ஆம் ஆண்டு மாறியது.

1994ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சியை இப்பள்ளி பெற்றுள் ளது. உயர்நிலைப் பள்ளியாக இருந்த எஸ்.எம். பி.எம். பள்ளி 2001 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக மாறியது.

மேல்நிலைப் பொதுத் தேர்வில் ஓர் ஆண் டைத் தவிர மற்ற ஆண்டுகளில் 100% தேர்ச்சியைப் பள்ளி பெற்றுள்ளது. மாவட்ட அளவில் முதல் சில இடங்களை இப்பள்ளி மாணவர்கள் பிடித்துள்ளனர். மேல்நிலை வகுப்புகளுக்கென உயர் ரக ஆய்வுக் கூடங் கள் கட்டப்பட்டுள்ளன.

திறமையும், அனுபவமும் மிக்க 100 ஆசிரி யர்களைக் கொண்டும் 32 அலுவலகப் பணி யாளர்களைக் கொண்டும் இயங்கி வருகிறது. சுமார் 2300 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

படிப்பிற்கு மட்டுமில்லாமல், விளையாட்டிற்கும் முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. இதற்கென பெரிய அளவில் விளையாட்டு மைதானமும் இருக்கிறது. 5 உடற்கல்வி ஆசிரியர்களைக் கொண்டு பல்வேறு விளை யாட்டுகளுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. பயிற்சி பெற்ற மாணவர்கள் மாவட்ட, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பதக்கங்களைப் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

மாணவர்கள் கலை வித்தகர்களாக விளங்க வேண்டும் என்ற நோக்கில், பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சிலம்பம், கராத்தே, நாட்டுப்புற நடனம், கீ போர்ட், யோகாசனம், மேஜை பந்தாட்டம், ஸ்கேட்டிங் போன்றவற்றிற்கு தனித்தனி வல்லுநர்களை நியமித்துப் பயிற்சி அளித்து வருகிறது.


கடந்த சில ஆண்டுகளாக தேசிய இளம் விஞ்ஞானி விருதுகளையும், இப்பள்ளி மாணவ, மாணவியர் பெற்றுள்ளனர்.


பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!

- கேசரி
- காந்தபட்சி
- அசவம்
- அக்கன்

- எ. இர்ஃபானா, மூன்றாம் வகுப்பு









விடை:
சிங்கம் - கேசரி
மயில் - காந்தபட்சி
குதிரை - அசவம்
நாய் - அக்கன்

ஃப்ரெண்ட்ஷிப்



வாழ்க்கையில் நண்பர்கள் மிக மிக அவசியம். நண்பர்கள் இல்லாமல் இருப்பது சாத்தியமே இல்லை! நண்பர்களிடம் மட்டுமே எந்த விஷயத்தைப் பற்றியும் மறைக்காமல் விவாதிக்க முடியும். சந்தோஷமோ, வருத்தமோ எதையும் பகிர்ந்து கொள்ளக் கூடியவனே நல்ல நண்பன். நண்பன் என்ன செய்தாலும் கண்மூடித்தனமாக ஆதரிப்பவன் சிறந்த நண்பன் அல்ல. நண்பன் தவறு செய்யும் போது அதை எடுத்துக் கூறி திருத்துபவனே சிறந்த நண்பன். நல்ல நட்பு வாழ்க்கை முழு வதுமே எந்த இடையூறு வந்தாலும், தாண்டி தொடரும்.

- எஸ். ஆதித்யா,
ஒன்பதாம் வகுப்பு

அமித்: *ஏண்டா, நாய் என் தட்டையே முறைச்சுப் பார்க்குது?*


சுமித்: *அதோட தட்டில் சாப்பிட்டால் கோபம் வராதா?*

- வி. நிஷா,
ஒன்பதாம் வகுப்பு

அதிசய '5'!

ஏதாவது ஓர் எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். அந்த எண்ணுடன் அதற் கடுத்த எண்ணையும் கூட்டிக் கொள்ளுங்கள். அத்துடன் 9ஐ கூட்டுங்கள். அதை 2 ஆல் வகுக்கவும். அந்த எண்ணுடன் நீங்கள் முதலில் நினைத்த எண்ணைக் கழித்தால் விடை எப்பொழுதுமே '5'தான் வரும்!

- நிஷா,
ஒன்பதாம் வகுப்பு



- எம். பிரசன்னா,
எட்டாம் வகுப்பு

- நெப்டியூனை தொலைநோக்கியின் மூலம் மட்டுமே பார்க்க முடியும்.
- ஒரு கப் பாலில் 159 கலோரிகள் உள் ளன.
- இந்தியா, தென்கொரியா மற்றும் பஹ்ரைன் ஆகியவை ஆகஸ்ட் 15ஆம் நாளை சுதந்திர தினமாக கொண்டாடுகின்றன.

- டி. மஞ்சுபாலா,
பன்னிரண்டாம் வகுப்பு

- உலகம் முழுவதும் தேங்காய் தலையில் விழுந்து ஆண்டுக்கு 20,000 பேர் இறந்து போகிறார்கள்.
- ஜோர்டான் நதியில் மீன்களே இல்லை.
- உலகத் தேவைகளில் 90% வைரம் ஆப்பிரிக்காவில் இருந்து கிடைக்கிறது.

- ஜெ.அமலா,
ஜென்னட் ரேகா,
பதினோராம் வகுப்பு

என்ன நாள்?

1. கறுப்பு ஞாயிறு - டிசம்பர் 6
2. கறுப்பு செவ்வாய் - செப்டெம்பர் 11
3. நுகர்வோர் பாதுகாப்பு நாள் - மார்ச் 15

- எ. நித்யா,
பன்னிரண்டாம் வகுப்பு

"ஹலோ, டெலிபோன் ஆபரேட்டரா? பாட்னாவுக்கும் லாஸ்வேகாஸ்க்கும் இடையில் நேர வித்தியாசம் எவ்வளவு?"
"ஒரு நிமிஷம் சார்..."
"நன்றிங்க!"

- வி.அர்ச்சனா,
ஒன்பதாம் வகுப்பு





மொபைல் டெக்னாலஜி

1. நோகியாவின் தலைமையகம் ஃபின்லாந்தில் உள்ளது.

2. பாரத் டெலிகாம் லிமிட்டெட் மற்றும் ரிலையன்ஸ் இன்ஃபோ காம் நிறுவனங்கள் இந்தியாவில் முன்னணியில் இருக்கும் மொபைல் நிறுவனங்கள்.

- டி.தீபக் குமார்,
பதினோராம் வகுப்பு

● விண்வெளிக்கு முதலில் சென்றவர் - யூரிகாகரின்

● விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் - வாலன்டினா தெரஸ்கவா

● எருது விளையாட்டுக்குப் புகழ் பெற்ற நாடு - ஸ்பெயின்

- ஆர். ரஞ்சனா,
ஐந்தாம் வகுப்பு

வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஆழ்கடல்
மிதவையில் நின்று தேடினால்
மீன்கள் தான் கிடைக்கும்
மூழ்கித் தேடு முத்துகள்
கூட கிடைக்கும்!

- த. ராஜலஷ்மி ஷாலினி,
பன்னிரண்டாம் வகுப்பு

பயந்து ஓடிய பேய்!

வரதனுக்கு சாமர்த்தியம் போதாது. எல்லோரும் அவனை ஏமாற்றினார்கள். ஒரு நாள் வருத்தத்துடன் ஒரு பையில் குருவியையும், கொஞ்சம் ரொட்டியையும் எடுத்துக் கொண்டு ஊரின் எல்லையில் உள்ள ஒரு புளிய மரத்தடியில் அமர்ந்தான்.

அவனை ஈ மொய்க்க ஆரம்பித்தது. கோபத்தில் ஓர் அடி அடித்தான். ஒரே அடியில் ஏழு ஈக்கள் செத்து விழுந்தன. "ஒரே அடியில் ஏழைக் கொன்றேன்" என்றான் உரத்த குரலில். அந்த மரத்திலிருந்த பேய்க்குப் பயம் வந்தது. பயத்தை மறைத்துக் கொண்டு, "வீரனே, உனக்கு இரண்டு சோதனை வைக்கிறேன். அதில் நீ வென்றால் நான் ஊரை விட்டுச் சென்று விடுகிறேன்" என்றது. வரதனும் உள்ளூர பயந்தாலும், ஒப்புக் கொண்டான். "இந்தக் கல்லை பறவையாக்கு பார்க்கலாம்" என்றது பேய்.


வரதன் கல்லை பைக்குள் போட்டு விட்டு, பையிலிருந்த குருவியை எடுத்து நீட்டினான். அதிசயித்த பேய், "இந்தக் குருவியை உணவுப் பொருளாக மாற்ற முடியுமா?" - என்றது.

வரதன் பைக்குள் குருவியை வைத்து விட்டு ரொட்டியை எடுத்துக் காண்பித்தான். பேய் பயந்து இடத்தைக் காலி செய்தது. அந்நாட்டு அரசன் இதைக் கேள்விப்பட்டு வரதனுக்கு நல்ல வேலையும் பரிசும் கொடுத்தான்.

- எஸ். ஜான்,
ஆறாம் வகுப்பு.



திண்டுக்கல் எஸ்.எம்.பி.எம் பள்ளி ஸ்பெஷல்



எஸ்தர், ஆறாம் வகுப்பு




கே.ஹெச். திவ்யா, பன்னிரண்டாம் வகுப்பு



பி. சுகந்தி சர்வேஷ், ஒன்பதாம் வகுப்பு

டி. பரத், நான்காம் வகுப்பு





எஸ். ரிஷிகுமார், ஐந்தாம் வகுப்பு




எஸ். நிஷா, ஒன்பதாம் வகுப்பு




ஜெ. திவ்யா, பதினோராம் வகுப்பு

ஆர். தர்ஷிணி, எட்டாம் வகுப்பு





ஏ.எக்ஸ்.ரூபன், எட்டாம் வகுப்பு



பி.ஐஸ்வர்யா, பதினோராம் வகுப்பு

கதைகள் சொன்ன தாத்தா!

☺ ஜானகி மணாளன் ☺

பண்டைய கிரீஸ் நாட்டில், அடிமைகளை ஏலம் விடும் சந்தை ஒன்றில் இளம் அடிமை ஒருவர் இருந்தார். அவருடன் இன்னும் சில அடிமைகளும் இருந்தனர்.

அந்த இளம் அடிமைக்குத் தனது அடிமை வாழ்வு பிடிக்கவில்லை. சுதந்திர மனிதனாகவே அவர் வாழ ஆசைப்பட்டார்.

ஆனாலும், தன் மனம் விரும்புவதை, நான்கு பேரிடம் சொல்லி ஆறுதல் பெற விரும்பினார் அவர்.

அவர் தனது சக அடிமைகள் சிலரிடம் தன் மனதில் இருந்த சுதந்திர வேட்கையை எடுத்து உரைத்தார். அவருடைய பேச்சும் கருத்தும் மற்றவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லாரும் அவர் தலைமையில் ஒரு குழுவாகவே சேர்ந்து விட்டனர்.

அவர்கள் எல்லாரும், அடிக்கடி உரத்த குரலில் பேசிக் கொண்டு இருப்பார்கள்.

"நாமும் என்ன... மனிதர்கள் தானே? எல்லாரையும் போல் தானே, நமக்கும் கை, கால்கள் இருக்கின்றன? பிறகு ஏன், நாம் மட்டும் ஆடு, மாடுகளைப் போல் நடத்தப்பட வேண்டும்...?" என்று புலம்பினார்கள்.

இதெல்லாம் எப்படியோ ஊரின் செல்வந்தர்களுக்குத் தெரிந்து விட்ட்து. உடனே, அவர்களிடம் பெரும் கவலை.... ஏனெனில், அவர்களின் செல்வ நிலையும் வியாபாரமும் அந்த அடிமைகளின் உடல் உழைப்பை மட்டுமே நம்பியிருந்தன. அத்தகைய அடிமைகள் போராடி விடுதலை பெற்றுச் சென்று விட்டால், அவர்களின் வேலைகளுக்கு ஆள் இல்லாமல் போய்விடும் அல்லவா?

எனவே, அடிமைகளின் எதிர்ப்பை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்று செல்வந்தர்கள் நினைத்தனர். எல்லாரும் ஒன்று கூடிப் பேசினர்.

எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம், அந்த இளம் அடிமைதான் என்று கண்டு



பிடித்துவிட்டனர். இனி மற்றவர்களை அவருடன் சேரவிடக் கூடாது என்று முடிவு செய்தனர். அதற்கு ஒரே வழி அந்த இளம் அடிமையைத் தனிமைப்படுத்தி வைப்பது தான் என்று தீர்மானித்தனர்.

ஆகவே, அவரைத் தரதர என்று இழுத்துச் சென்று, சிறையில் அடைத்துவிட்டனர். அந்த இடம் இருட்டறை. மூச்சுவிடக் கூடக் காற்று வராது. நல்ல வெளிச்சமும் கிடையாது. அதில் வைத்து வெளியில் பூட்டி விட்டனர்.

அவர் அச்சிறு அறையில் முடங்கிப் போனார். உணவு கூடச் சரியாகக் கொடுப்பது கிடையாது. நல்ல உறக்கமும் இல்லை. எப்போது பகல், எப்போது இருட்டு என்பது கூடப் புரியாது.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன. மெல்ல மெல்ல அந்த இளைஞர் முதுமை அடைந்தார்.

மிக நீண்ட காலத்துக்குப் பிறகு, வயதாகி விட்ட அவர், முதுமையின் தள்ளாட்டத்தில் தடுமாறுகிறார் என்பதை உணர்ந்த செல்வந்தர்கள், விடுதலை பெற்றால்கூட இனி அவரால் எதையும் சாதித்துவிட முடியாது எனக் கருதி அவரை விடுதலை செய்தனர்.

வெளிவந்தவருக்கு கிழக்கும் தெரியவில்லை. மேற்கும் புரியவில்லை. கண் பார்வை சரியில்லை. காதும் கேட்கவில்லை. தலை முடியும் தாடியும், தூய பஞ்சாக நரைத்துவிட்டன.

அவர் தன் நண்பர்களைத் தேடிச் சென்றார். எவரும் கண்ணில் படவில்லை. அவர்கள் எல்லாரும், செல்வந்தர்களின் கொடுமைகளுக்குப் பயந்து போய்த் தப்பித்து எங்கோ ஓடிவிட்டனர்!

கடைசியில், ஆதரவற்ற நிலையில், பிச்சைக்காரனைப் போன்று வீடுவீடாகச் சென்றார். பெரியவர்கள் அவரைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால், குழந்தைகள் ஓடிவந்து, அவரைச் சூழ்ந்து கொண்டனர். 'தாத்தா... தாத்தா...' என்று அன்போடு அழைத்து மகிழ்ந்தனர்.

அடிமைத் தாத்தாவும் அன்போடு அவர்களை வாரி அணைத்துக் கொண்டார். அவர்களைத் தன்னைச் சுற்றி அமர்த்திக் கொண்டு, நீதி போதனைகள் மிகுந்த நல்ல நல்ல கதைகளைக் கூறினார்.

அவர் கூறும் கதைகளைக் குழந்தைகள் பெரிதும் விரும்பினார்கள். அவரை எப்போது, எங்கு பார்த்தாலும், உடனே அருகில் ஓடி வந்து, கையைப் பற்றிக் கொண்டு "தாத்தா, தாத்தா... கதை சொல்லு... கதை சொல்லு..." என்று உரக்கக் கூச்சலிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வார்கள்.

தாத்தாவும் எப்படியும் தினம் ஒரு புதுக் கதை வீதம் இட்டுக் கட்டிக் கூறிவிடுவார். சில கதைகள் மனதுக்கு உருக்கமாக இருக்கும். வேறு சில நகைச்சுவையாக இருக்கும். அவற்றைக் கேட்டுக் குழந்தைகள் ஆனந்தக் கூத்து ஆடினார்கள்.

தாத்தாவிடம் கேட்கும் கதைகளைக் குழந்தைகள் தமது வீடு சென்று, அவரவர் அப்பா, அம்மாவிடம் கூறினார்கள். அவர்களும் அந்தத் தாத்தா சொன்ன கதைகளைக் கேட்டு ஆனந்தம் அடைந்தனர்.

நாளடைவில், அந்தத் தாத்தாவின் கதைகள் நாடு முழுவதும் பரவிப் பிரபலம் அடைந்துவிட்டன.

ஒரு காலத்தில் எந்த அடிமை இளைஞனின் விடுதலை வேட்கை வெளியில் பரவி விடக் கூடாது என்பதற்காக அவரை இருட்டறையில் அடைத்து வைத்தார்களோ, அதே இளைஞன் அங்கிருந்து முதியவராக வெளிவந்து அந்த ஊர்க் குழந்தைகள் மூலமாகக் கூறிய எண்ணற்ற கட்டுக் கதைகள் உலகம் முழுவதும் பரவி, இன்றும் அவருடைய புகழைப் பரப்பிக் கொண்டு இருக்கின்றன.

அந்தக் கதைகளைக் கூறிய அடிமைத் தாத்தா ஈசாப். அவர் பெயராலேயே, அந்தக் கதைகள் 'ஈசாப் கதைகள்' என அழைக்கப்படுகின்றன.

வெற்றி பெறுவதற்கு நிறைய விடா முயற்சியும் பெரும் மன உறுதியும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.


- சுவாமி விவேகானந்தர்







குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்







- கே. சாந்தி, மன்னார்குடி

இடமிருந்து வலம்:

1. விடுமுறையில் நாம் செல்வது (4)
8. கை (3)
11. முகில் (3)
12. கண்ணனின் மனைவியருள் ஒருவர் (4)
13. பாட்டி சொல்வது (2)
14. சிரிப்பு (4)

வலமிருந்து இடம்:

2. மேடு என்பதன் எதிர்ப்பதம் (4)
3. சபைக்கு வேறு பெயர் (2)
5. நடந்து செல்பவர் (4)
6. அலாவுதீனின் அற்புத விளக்கைத் தேய்த்தால் இது வரும் (3)
15. கர்வம் (4)

மேலிருந்து கீழ்:

1 .... சோறு போடும் (4)
2. விருந்தினர்களை உபசரிப்பது நம்...... (4)
4. இது இருந்தால் தான் பூட்டைத் திறக்கலாம் (2)
7. வீட்டுக்கு ஒரு ....வளர்ப்போம் (3)
9. பஞ்ச பூதங்களில் ஒன்று (4)
10. ரிக், யஜுர், ..., அதர்வனம் என்று வேதங்கள் நான்கு வகைப்படும் (2)
11. நிறையப் படித்தால் .... ஆகலாம் (2)
13. இதற்குத் தெரியுமா கற்பூர வாசனை? (3)

கீழிருந்து மேல்:

3. முகமதியரின் இறைவன் (3)
6. பெண் (2)
15. பயம் (4)

சர்க்கரையை விட




மிக்ஸர் பிட்ஸ்

இரண்டு கிரேக்க வார்த்தைகளில் இணைப்பிலிருந்துதான் ஆட்டோகிராஃப் என்ற சொல் வந்தது. 'ஆட்டோஸ்' என்றால் கிரேக்க மொழியில் 'சுயமாக' என்று பொருள். 'கிரேபியன்' என்றால் 'எழுதிய' என்று பொருள். இரண்டும் சேர்ந்து ஆட்டோ கிராஃப் என்ற சொல் பிறந்தது.

- நெ. இராமன், சென்னை



நெப்போலியனின் படைப் பிரிவில் பணியாற்றிய தலைமை டாக்டர் டொமினிக் ஜீன் லாரை என்பவர்தான் ஆம்புலன்ஸ் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.



ஃபிரெஞ்சு வார்த்தையான ஹோபிடல் ஆம்புலண்ட் என்ற வார்த்தைக்கு நகரும் மருத்துவமனை என்று பொருள். முதல் ஆம்புலன்ஸ் ஒரே ஒரு குதிரை பூட்டிய வண்டியாகத்தான் காட்சியளித்தது.


- எஸ். மோகன்ராஜ், சீர்காழி

விளக்குகளை நோக்கி ஏன் பூச்சிகள் ஈர்க்கப்படுகின்றன? விளக்குகளில் இருந்து வெளியாகும் ஒருவித கதிரியக்கம்தான் பூச்சிகளை ஈர்க்க காரணமாகின்றது.

ஆனால், ஆண் பூச்சிகள் மட்டுமே விளக்குகளால் ஈர்க்கப்படும். பெண் பூச்சிகளின் வயிற்றில் உள்ள சுரப்பிகளில் இருந்து ஒருவித மணம் வீசக்கூடிய திரவம் சுரக்கும். அந்தத் திரவம் காற்றில் பரவி விடுகின்றன. பெண் பூச்சிகளில் இருந்து வெகு தூரத்தில் பறந்து கொண்டிருக்கும் ஆண் பூச்சிகள் அந்தக் கதிர்களால் ஈர்க்கப்பட்டு பெண் பூச்சிகளை நோக்கி வருகின்றன. பெண் பூச்சிகள் பக்கத்தில் இருக்கிறது என்ற நினைப்பில்தான் ஆண் பூச்சிகள் மெழுகுவர்த்தி, தெரு விளக்குகளில் போய் மோதுகின்றன.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

உலகில் இருக்கும் மொத்த நீரின் அளவு 1400 மில்லியன் கியூபிக் கிலோ மீட்டர். பூமியின் மொத்த நீரில் சுமார் 3 சதவிகிதமே சுத்தமான நீர். இந்தச் சுத்த நீரிலும் நான்கில் மூன்று பாகம் பனிப்படி வங்களாக உறைந்த நிலையில் உள்ளன. ஆயிரம் ஆண்டுகளாக பூமியில் உள்ள ஆறு




இனிப்பான பொருள் எது?

களில் ஓடும் மொத்த நீரின் அளவு இந்தப் பனிப்படிவங்களில் உறைந்து கிடக்கின்றன. உலக உயிரினங்கள் அனைத்திலும் தண்ணீரின் கூறு இருக்கிறது. மனித உடலில் 65%, யானையின் உடலில் 75%, உருளைக்கிழங்கில் 80% தண்ணீர் உள்ளது. மனிதன் சராசரியாக தனது வாழ்நாளில் அருந்தும் நீரின் அளவு 60,000 லிட்டர்.

- டி.ஆ. பாலாஜி, மதுரை


* யூக்கலிப்டஸ் மரத்தை 'பச்சைத் தங்கம்' என்று குறிப்பிடுவார்கள்.
* சுறாமீனை ஜப்பானியர்கள் 'கடல தங்கம்' என்றழைக்கிறார்கள்.
* தூய பைரைட்டுகளுக்கு 'முட்டாளின் தங்கம்' என்று பெயர்.



* பாறைகளில் உள்ள சில மைக்காக்கள் பொன், வெள்ளி போல மின்னும். அவ்வகை மைக்காவிற்கு 'காக்காப் பொன்' என்று பெயர்
* 'கறுப்புத் தங்கம்' என்பது நிலக்கரி.
* 'வெள்ளைத் தங்கம்' என்பது உப்பின் மறு பெயர்.

- எஸ். துர்கா காத்யாயனி, தூத்துக்குடி

சர்க்கரையைவிட அதிக இனிப்பான பொருள் 'தௌமாட்டின்'. ஆப்பிரிக்காவில் விளையும் 'கட்டேம்ஃபே' என்னும் தாவரத்



தின் விதையிலிருந்து பெறப்படும் இப்பொருள், சர்க்கரையை விட 6150 மடங்கு அதிக இனிப்புடையது.

- எம். வினோத், சங்கரன்கோவில்

எந்த விலங்கும் தனக்குப் பின்புறம் உள்ளதைப் பார்க்க வேண்டுமென்றால் கழுத்தைத் திருப்பித்தான் பார்க்க முடியும். ஆனால் ஒட்டகச்சிவிங்கி மட்டும் கழுத்தைத் திருப்பாமல் பின்புறம் பார்க்கும் வகையில் கண்கள் அமைந்திருக்கின்றன.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்



நித்தம் கொட்டும், சத்தம் இல்லை!

விடுகதைப் பக்கம்



I. 1. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை - அது என்ன?

2. சின்னக் குதிரைக்கு நாறு கடிவாளம் - அது என்ன?

3. காலை மாலை நெட்டை! மற்ற நேரம் குட்டை - அது என்ன?

4. கால் படாத நிலத்தில் கரு இல்லாத முட்டை - அது என்ன?

5. காளை கட்டிக் கிடக்குது! கயிறு ஓடிக் கிடக்குது - அது என்ன?

- வெ. ராணி,
நாமகிரிப் பேட்டை

II. 1. அனலிலே பிறப்பவள், ஆகாயத்திலே அலைபவள் - அவள் யார்?

2. உள்ளே இனியனவன், உடம்பெல்லாம் சொறியனவன் - அவன் யார்?

3. தலைக்கனம் கொண்டவள்; உரசினால் எரிபவள் - யார் அவள்?

4. கையில்லாமல் நீந்துவான்; காலில்லாமல் ஓடுவான் - அவன் யார்?

- ஸ்ரீரா. இரவிவர்மன்,
ஆண்டிமடம், பெரம்பலூர் மாவட்டம்

III. 1. ஆடுவான், பாடுவான், ஆனால் நகர மாட்டான் - அவன் யார்?

2. வெள்ளை உடம்புக்கு கறுப்பு மேலாடை அணிந்திருப்பான் - அவன் யார்?

3. நம் வாடகை வீட்டில் இவன் சொந்த வீடு கட்டுவான், வீட்டிற்குச் சென்றவர்களை விருந்தாக்கிக் கொள்வான் - அவன் "

4. கூரையில்லா வீட்டுக்குள் குடிக்கும் பொருளுண்டு - அது என்ன?

- எம். வினோத்,
சங்கரன்கோவில்

IV. 1. முள்ளு முள்ளுக்குள்ளே முந்திரித் தோப்புக்குள்ளே வைக் கோல் போருக்குள்ளே கண்டெடுத் தேன் வைரமணி - அது என்ன?

2. நீண்ட நெடும்பாம்பு, நெளி யாத கரும்பாம்பு, அசையாது படுத்திருக்கும் அடிபட்ட செத்த பாம்பு - அது என்ன?


3. அண்ணன் தம்பி ஐவர். அண் ணன் இல்லாவிட்டால் தம்பிகள் பாடு திண்டாட்டம் - அவர் யார்?

4. பச்சைக் கதவு வெள்ளை சன்னல் உள்ளே கறுப்பு ராஜா - அது என்ன?

- ஆ.சந்தியா
பத்தாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி,
நல்லூர், திருவண்ணாமலை மாவட்டம்

விடைகள்:

I. 1. இமை 2. தறி 3. நிழல் 4. காளான் 5. பரங்கிக்காய்
II. 1. புகை 2. பலாப்பழம் 3. தீக்குச்சி 4. படகு
III. 1. மரம் 2. உளுந்து 3. சிலந்தி 4. கிணறு
IV. 1. பலாப்பழம் 2. ரயில் பாதை 3. கைப் பெருவிரல் 4. சீத்தாப்பழம்



புதிர் உலகம்

உண்டியலில் போட்ட பணம் எவ்வளவு?

I. மொத்தம் 30 பனங்காய்கள். இதில் 3 பேருக்கு 10 காய்களும், 20 கண்களும் வர வேண்டும். இதில் 3 கண்ணுடையது 10 காய்கள், 2 கண்ணுடையது 10 காய்கள், 1 கண்ணுடையது 10 காய்கள், மொத்தம் 30 காய்கள், 60 கண்கள். இவற்றை 3 பேருக்குப் பங்கிடுங்கள். காயை வெட்டக் கூடாது.

- ஏ. ஜெரி, பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப் பள்ளி, நல்லூர்,
திருவண்ணாமலை மாவட்டம்

II. எட்டு எழுத்துகளுள்ள பெயரைக் கொண்ட ஓர் ஊர். கோயிலால் பிரசித்தி பெற்ற ஊர். ஊரின் பெயரை மூன்றாகப் பிரித்தாலும் பொருள் தரும். முதல் பிரிவு மரியாதையைக் குறிக்கும். இரண்டாவது பிரிவு மலரைக் குறிக்கும். கடைசிப் பிரிவு 'வாசல்' என்று பொருள்படும் - அது எந்த ஊர்?

- நெ. இராமன், சென்னை


III. கதிரவனும், ஷாலினியும் ஒரு மாமரத்திலிருந்து மாம்பழங்களைப் பறித்துத் தின்னத் திட்டமிட்டார்கள். கதிரவனுக்கு மட்டுமே மரம் ஏறத் தெரியும். எனவே கதிரவன், ''நான் மரம் ஏறிப் பழங்களைப் பறித்துப் போடுகிறேன். நீ கீழே விழும் பழங்களை எடுத்து வைக்க வேண்டும். மரம் ஏறும் எனக்கு இரு பங்கு. உனக்கு ஒரு பங்கு தான்'' என நிபந்தனை விதித்தான். ஷாலினியும் சம்மதித்தாள். மரத்தின் மேல் தாவி ஏறினான் கதிரவன். அவன் கீழே இறங்கி வந்ததும் பழங்களைப் பங்கு போட்டனர். ஆனால் ஷாலினி திருப்தியடையவில்லை. ''கதிரவன்! எனக்கு இன்னும் ஒரே ஒரு பழம் கொடுத்துவிடு!'' என கெஞ்சினாள். கதிரவனும் ''போனால் போகிறது இந்தா நீ கேட்ட ஒரு பழம்'' என்று ஷாலினிக்குக் கொடுத்து விட்டான். பிறகு கணக்குப் பார்த்ததில் என்ன ஆச்சரியம், இருவரிடமும் பழங்கள் சரி சமமாக இருந்தன. அப்படியெனில் கதிரவன் மரம் ஏறிப் பறித்த பழங்கள் எத்தனை?

- குட்டி
பிரசன்னா,
கரூர்



IV ஒன்றிலிருந்து எட்டு வரை அடுத்த அடுத்த எண்கள் எக்கோணத்திலும் அருகில் வரக்கூடாது. முயன்று பாருங்கள்!

- கே. சிதம்பரநாதன்,
மதுரை



V. ஒரு வறட்சி நிவாரண நன்கொடைக்காக சில முக்கியப் பிரமுகர்களிடம் உண்டியல் குலுக்கப்பட்டது. முதல் நபர் ஒரு தொகையை உண்டியலில் போட்டார். இரண்டாம் நபர் முதல் நபரைவிட இரு மடங்கு தொகையை உண்டியலில் போட்டார். மூன்றாமவர் இரண்டாம் நபரைவிட மூன்று மடங்கு தொகையை உண்டியலில் போட்டார். நான்காம் நபர் மூன்றாவது நபரைவிட நான்கு மடங்கு தொகையை உண்டியலில் போட்டார். நால்வரும் போட்ட மொத்தத் தொகை ரூ.16,500/- அப்படியானால் ஒவ்வொருவரும் போட்ட தொகை எவ்வளவு?

- ஆர். குட்டி,
கரூர்

VI. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குப் பதில்களின் முதல் எழுத்து 'ம', ஏறு வரிசையில் அமைந்திருக்கின்றன. விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்!

1. இந்தியாவின் தேசியப் பறவை ....

2. தோலினால் சுவாசிக்கும் உயிரி ....

3. இந்தியாவின் அணிகலன் எனப்படும் மாநிலம் ....

4. உலகிலேயே அதிக வார்த்தைகளைக் கொண்ட புத்தகம் ....

5. தனது வாழ் நாளில் ஒரு முறை கூட விமானத்தில் பயணம் செய்யாத தலைவர் ....

6. 'தமிழ்க் கடல்' என்று அழைக்கப்படும் புகழ் பெற்ற எழுத்தாளர் ....

7. இந்தியாவில் விமான நிலையங்கள் அதிகமாக உள்ள மாநிலம் ....

8. வாரணாசி இந்து பல்கலைக் கழகத்தை தோற்றுவித்தவர் ....

- சிவ. மணவழகி,
திருவாரூர்



விடைகள்:

I. ஒருவருக்கு 3 கண்ணுடையது 5 காய்கள், 1 கண்ணுடையது 5 காய்கள். மொத்தம் 10 காய்கள். 20 கண்கள் வரும். இரண்டாவது நபருக்கு 3 கண்ணுடையது 5 காய்கள், 1 கண்ணுடையது 5 காய்கள். மொத்தம் 10 காய்கள். 20 கண்கள் வரும். மூன்றாவது நபருக்கு, 2 கண்ணுடைய 10 காய்கள் கொடுத்தால் 10 காய்கள், 20 கண்கள் வரும்.

II. திருமுல்லை வாயில்

III. 6 பழங்கள்

IV.

	3	5	
7	1	8	2
	4	6	

V.

முதல் நபர்	500
இரண்டாம் நபர்	1000
மூன்றாம் நபர்	3000
நான்காம் நபர்	12000
மொத்தம்	16,500

VI. 1. மயில் 2. மண்புழு 3. மணிப்பூர் 4. மகாபாரதம் 5. மகாத்மா காந்தி 6. மறைமலை அடிகள் 7. மத்தியப் பிரதேசம் 8. மதன்மோகன்மாளவியா



செல்லக் கிளியே, கொஞ்சம் சொல்லு கிளியே!

உச்சிமரக் கிளையினிலே
செல்லக் கிளியே - வந்து
ஒத்தையிலேன் இருந்தனையோ?
சொல்லு கிளியே!

எச்சரித்துத் தொலைவினிலே
செல்லக் கிளியே - அன்னை
இரைபொறுக்கப் பறந்தனளோ?
சொல்லு கிளியே!


அச்சமிரு விழிகளிலே
செல்லக் கிளியே - மண்டி
அங்குமிங்கும் சுழலுவதேன்?
சொல்லு கிளியே!

நிச்சயமாய்த் துயரிழையேன்
செல்லக் கிளியே - என்னை
நெருங்கிவரத் தயங்குவதேன்?
சொல்லு கிளியே!

பச்சைநிற உடலழகு
செல்லக் கிளியே - மிஞ்சும்
பசிபொறுக்க முடியலையோ?
சொல்லு கிளியே!

இச்சையுடன் பழம்தருவேன்
செல்லக் கிளியே - கொஞ்சம்
இறங்கிவந்து பழகுவையோ?
சொல்லு கிளியே!

- தளவை இளங்குமரன்



படம் பிடித்துக் காட்டும் தொலைநோக்கி!



இரண்டு லென்ஸ்களை வெவ்வேறு கோணத்தில் வைத்துப் பார்த்தால், தூரத்திலுள்ள பொருட்கள் அருகில் இருப்பது போல் தெரியும். இந்த அற்புத தகவலை யார் கண்டுபிடித்தது என்று சரியாகத் தெரிய வில்லை. முதல் தொலை நோக்கி பற்றி சரி யான தகவல்களே இல்லை. கண்ணாடி கி.மு. 3500லேயே கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தொலைநோக்கி தோன்றியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நிகழவில்லை. ஒளி விலகல், பிரதிபலிப்பு விதியை வைத்தே தொலைநோக்கி இயங்குகிறது. 17ம் நூற்றாண்டில், கலீலியோ தொலைநோக்கியைப் பயன்படுத்துவதற்கு முன்பு, இதனைப் பற்றி அறிவியல் ரீதியான வரலாறு ஏதும் இல்லை.

கி.பி. 1608ல் ஹாலந்தில் தொலைநோக்கி உருவாக்கப்பட்டது. ஹான்ஸ் லிப்பர்ஷே என்ற டச்சுக்காரர் கண்கண்ணாடி செய்பவர். இவர் இரண்டு லென்ஸ்களைப் பயன்படுத்தி பொருட்களைப் பார்க்கும்போது, எதிர்பாராத விதமாக தூரத்திலுள்ள சர்ச் கட்டடத்தை லிப்பர்ஷே காண நேர்ந்தது. இதுதான் தொலை நோக்கி பிறந்த கதைகளுள் ஒன்று. தொலை நோக்கி ஓர் எதிர்பாராத கண்டுபிடிப்பு. பின் ஸகாரியன் ஜான்சன், ஜேம்ஸ் மெட்டியஸ் இருவரும் கூட, தொலைநோக்கி கண்டுபிடிப்புக்காக கிரீடம் சூட்டப்பட வேண்டியவர்கள்! இரு லென்ஸ்களை இணைத்து, தொலை நோக்கி யாக்க முடியும் என்ற சூட்சுமத்தை அறிந்த லிப்பர்ஷே, டச்சு அரசிடம் 'கண்டுபிடிப்பு உரிமம்' கோரினார். மக்கள் அதற்கு முன்பே அவ் வகைக் கண்ணாடியைப் பயன்படுத்தியதால் உரிமம் மறுக்கப்பட்டது. அதன்பின் ஒரு சில மாதங்களிலேயே தொலைநோக்கி ஐரோப்பா முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டது.

கி.பி.1564 - 1642களில் இத்தாலியில் வாழ்ந்த கலீலியோ கலீலி ஒரு கணித மேதை; வானவியல் நிபுணரும் கூட. 1608 - 1609ஆம் ஆண்டுகளில் ஹாலந்தில் தொலைநோக்கி செய்து, தூரப் பொருட்களைப் பார்ப்பது பற்றி கேள்விப்பட்டு, அதன்படி தானே ஒரு தொலை நோக்கியைச் செய்தார். மக்களிடம் தொலை நோக்கியின் திறமையையும், அற்புதத்தையும் விளக்கி, தொலைப் பொருட்களையும், வான்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு


ஜூன் இதழில் வெளிவந்த போட்டியில் ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. ஏதென்ஸ் 2. தெஸ்ஸலோனிகி, ப்ரெய்யஸ் 3. டிராக்மா 4. கிரீக் 5. 1896 6. சிலி


பரிசு யாருக்கு?

1. எஸ். அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, மேக்ஸ்வெல் மெட்ரிகுலேஷன் பள்ளி, தஞ்சாவூர்.
2. பி. தமிழரசன், பத்தாம் வகுப்பு, பேரங்கியூர், விழுப்புரம் மாவட்டம்.



மோகனா

பொருட்களையும் அருகில் கொண்டு வரும் வித்தையைக் காண்பித்தார். இதற்காக அந்நாட்டின் செனட், கலிலியோவின் சம்பளத்தை இருமடங்காக்கியது. தொலை நோக்கி, கலிலியோவின் கையில் வான் நோக்கித் திரும்பி, மக்களிடம் வானியல் விந்தைகளின் அற்புதத்தைக் காட்டியது.



• கலிலியோ



• ஹான்ஸ் லிப்பர்ஷே

சூரியன், சந்திரன், அதன் பன்முகத் தோற்றங்கள், வியாழன், விண்கற்கள், விண்மீன்கள், அதன் கூட்டங்கள் போன்றவற்றை கண்ணருகில் கொண்டு வந்தார். இதற்காக பாராட்டப்பட வேண்டியவர் கலிலியோதான்! கலிலியோவின் கண்டுபிடிப்புகள் மக்களுக்கு அதிர்ச்சி அலையையும், ஆனந்தத்தையும் ஒருங்கே அளித்தன. வியாழனைச் சுற்றி வரும் அதன் நான்கு சந்திரன்களைக் கண்டுபிடித்தார். பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்பதையும் கணித்தார். இதனைத் தெரிவித்ததற்காக போப் இவரை கடுமையாக கண்டித்தார். தொலைநோக்கி மூலம், வியாழனின் நான்கு சந்திரன்கள் சுற்றுவதைக் காண்பித்த போதும், மத போதகர்கள், கலிலியோ ஒரு ஏமாற்றுக்காரன் என்றனர்; பூமி சூரியனைச் சுற்றி வருவதாக சொல்லும் தகவல் கடவுள் நிந்தனை என்று கூறி, கலிலியோவை சிறையில் அடைத்தனர். சித்திரவதை செய்தனர். இறுதிக் காலத்தில் வெளியில் விடப்பட்டார். ஆனால் அன்று கலிலியோ கண்டுபிடித்த வியாழன் துணைக் கோள்களான காலிஸ்டோ, கனி, கனிமேட், ஐஓ என்பவை அவர் பெயராலேயே, 'கலிலியன் துணைக் கோள்கள்' என்று இன்றும் அழைக்கப்படுகின்றன.

18ம் நூற்றாண்டில் ஒளிவிலகல் லென்ஸ் தொலைநோக்கி பிரபலமானது. உலகிலுள்ள பெரிய தொலைநோக்கிகளிலெல்லாம், ஒளி பிரதிபலிக்கும் ஆடிகளே உள்ளன. தொலை நோக்கி வந்தபின் இன்று வானவியலின் முழுப் பரிணாமத்தையும் மனிதன் பார்த்து மகிழ்கிறான். ஜூன் 21, 2004ல், இரண்டு புதிய கோள்கள் OGLE TR 112, OGLE - 132 என்று பெயரிடப்பட்டவை, 600 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளவை 'டாப்ளர்' மூலம் அறியப்பட்டுள்ளன. பைனாகுலர்கள் இரட்டைத் தொலை நோக்கிகளே! உலகின் பெரிய தொலைநோக்கி ஹவாய் தீவிலுள்ளது. இதன் விட்டம் 982செ.மீ.

3. *கதிர்மல் செல்வன், ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, சிறுகடம்பூர், செஞ்சி.*
4. *க.விக்னேஷ், அரும்பார்த்தபுரம் அஞ்சல், புதுச்சேரி.*
5. *ராஜிதின் மோஹன், கோணம், நாகர்கோவில்.*

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1சு	ற்	று	லா	■	ம்	ள	ன்	2ப
த்	■	■	ல்	■	■	■	■	ண்
த்	■	லை	3அ	■	ரி	4சா	த	5பா
ம்	த	6ழு	■	7ம	■	வி	■	டு
■	■	■	8க	ர	ம்	■	■	■
9தெ	■	10சா	■	ம்	■	11மே	க	ம்
12ரு	க்	ம	ணி	■	13க	தை	■	ச
ப்	■	■	■	■	மு	■	■	ச்
14பு	ன்	ன	கை	■	தை	ந்	க	15அ



புதையல்

அமாவாசை அன்று இரவு பன்றித் தீவுக்கு மீண்டும் எப்படி செல்வது?

தீவிலிருந்து புறப்பட்ட வினாடியிலிருந்தே பாலுவுக்கு இதே சிந்தனைதான். ஒப்புக்கு, தன்னிடம் ஒரு வழி உள்ளதாக அவன் தன் நண்பனிடம் சொல்லியிருந்தாலும் அந்த வழி பலனளிக்குமா என்பது அவனுக்கு சந்தேகம் தான்.

கடற்கரையிலிருந்து சற்று உள்ளடங்கி, ஓம் முருகா நகரில் பாலுவின் வீடு இருந்தது. மூச்சுப்பிடித்து ஓர் ஓட்டமெடுத்தால் ஐந்தாவது நிமிடத்தில் கடற்கரையை அடைந்துவிடக் கூடிய தூரம் அது.

பாலுவுக்கு டில்லிபாபு என்கிற மீனவச் சிறுவனுடன் ஓரளவு பழக்கம் இருந்தது. டில்லிபாபு, பாலுவின் பள்ளியில் படித்தவன் தான். திடீரென்று ஒருநாள் போதும் படித்தது என்று அவனது பெற்றோர் அவனைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள்.

பாலுவுக்கு டில்லிபாபுவைத் தெரியுமே தவிர, அவன் 'ஃப்ரெண்ட்' அல்ல. டில்லிபாபு எப்போதும் வகுப்பில் கடைசி பெஞ்சில்தான் உட்கார்ந்திருப்பான். பெரும்பாலான வகுப்புகளில் அவன் தூங்கி விடுவான். வாத்தியார்கள் எழுப்பி கேட்டால் "நைட்டு கடலுக்குள்ளாற போயிட்டேன் சார். அதான்" என்பான்.

பாலுவுக்கு அதுவே பெரிய அதிசயமாக இருக்கும். தன் வயதொத்த பையன் தான். தினசரி கடலுக்குள் மீன் பிடிக்கப் போய், ஒய்வு நேரத்தில் பள்ளிக்கும் வருகிறான்!

"ஏலேய், நீ எங்கே வேணா போ, க்ளாசுக்கு வந்தா ஒழுங்கா படிக்கணும்!" என்று வாத்தியார்கள் எச்சரித்தால் "சரி சரி" என்று விழித்துக் கொள்வான். ஆனாலும் அடுத்த வகுப்பில் மீண்டும் கொர்ர் கொர்ர் தான்!

பாலுவின் அம்மா, 'நாம் வேண்டுமானால் அவனுக்கு புக்ஸ் வாங்கித் தரலாமே' என்று சொன்னதையொட்டி, டில்லிபாபுவின் பெற்றோரிடம் பேச ஒரு நாள் பாலு கடற்கரையை ஒட்டியுள்ள மீனவர் குடியிருப்புக்கு அவனைத் தேடிக் கொண்டு போனான்.

"அதெல்லாம் சரிப் படாதுப்பா. நீ போ.



தீவு

பா.ராகவன்

அவன் வரமாட்டான்" என்று கட் அண்ட் ரைட்டாகச் சொல்லிவிட்டார் டில்லிபாபுவின் அப்பா.

தோல்வியுடன் வீடு திரும்ப வேண்டியதாகி விட்டது. எப்போதாவது மார்க்கெட்டில் அவன் டில்லிபாபுவைப் பார்ப்பான். பார்த்ததும் சிரித்து விட்டு, ஓரிரு வார்த்தைகள் பேசுவான். பிறகு "நா வரேண்டா. அம்மா தேடும்" என்று சொல்லிவிட்டு ஓடிவிடுவான்.

பாலுவுக்கு இப்போது அந்த டில்லிபாபுவின் நினைவுதான் வந்தது. நீச்சல் தெரிந்த டில்லிபாபு, கட்டுமரம் ஏறிக் கடலுக்குள் மீன்பிடிக்கப் போகும் டில்லிபாபு, தைரியசாலியான டில்லிபாபு... பள்ளிக் கூடத்துக்கு வராவிட்டால் என்ன? அவனுக்கு கடலின் இயற்கை தெரியும். எப்போது சீறும், எப்போது தணியும், என்னென்ன பிரச்னைகள் வரும், எது வந்தால் எப்படி சமாளிப்பது என்று எல்லாம் தெரியும். அவனிடம் விஷயத்தைச் சொல்லி உதவி கேட்டால் என்ன?

இதுதான் பாலுவுக்கு வந்த யோசனை. நண்பனிடம் அதை அவன் சொல்லவில்லை. மாறாக, தானே டில்லிபாபுவிடம் பேசி, அவன் ஒப்புக் கொண்டதும் சொல்லலாம் என்று முடிவு செய்து கொண்டான்.



4

அன்று மாலை சாரணர் மாணவர்கள் அனைவரும் பத்திரமாக கரைக்குத் திரும்பி, மகாலிங்க வாத்தியாரிடம் விடை பெற்று அவரவர் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். வாத்தியாரும் மீனவக் குடியிருப்போரம் நிறுத்தியிருந்த தன் சைக்கிளில் ஏறிக் கிளம்பி விட்டார். கடலோரப் பாதுகாப்புப்படை ஆபீஸிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில்தான் டில்லிபாபுவின் குடிசை இருந்தது.

பாலு ஒரு கணம் யோசித்தான். நேரே டில்லி பாபுவைப் போய்ப் பார்த்துவிட்டே வீட்டுக்குப் போவது என்று முடிவு செய்து, விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

இருட்டத் தொடங்கியிருந்த நேரம். கடலோரக் காற்று சும்மா ஜிலுஜிலுவென்று அள்ளிக் கொண்டு போனது.

பாலு, டில்லிபாபுவின் வீட்டை அடைந்து, வாசலில் இருந்த வேலிப்படலைத் தள்ளித் திறந்து உள்ளே போய் குரல் கொடுத்தான்.

மூன்று முறை அழைத்ததும் எழுந்து வந்த டில்லிபாபு தூங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. பாலுவைக் கண்டதும் "இன்னாடா, இந்நேரத்துலே? எப்பிடி இருக்கே?" என்றான் அவன்.

"உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும் டில்லி. கொஞ்சம் வெளில வர்ரியா?" என்றான் பாலு.

"சொல்லு, நேத்திக்கு கடலுக்குள்ளாற போயி, இப்பத்தான் திரும்பி வந்தோம். ரெண்டு நாளா தூங்கலை. மீனும் இன்னிக்கு அத்தனை நல்லா அகப்படலை" என்றான்.

இருவரும் வெளியே நடந்தார்கள். இருபதடி தூரம் தள்ளியிருந்த மாதாகோயிலின் பின்புறத்திண்ணையில் போய் அமர்ந்ததும் பாலு நேரே விஷயத்துக்கு வந்தான்.

"டில்லி, ஒரு முக்கியமான விஷயம். இன்னிக்கு ஸ்கவுட்ஸ் எல்லாரும் பன்றித் தீவுக்குப் போயிருந்தோம், மகாலிங்க வாத்தியார் அழைச்சிக்கிட்டுப் போனார்" என்று ஆரம்பித்து, மதிய உணவு நேரத்தில் தான் மட்டும் தனியாக காட்டுக்குள் போனதையும் அங்கிருந்த பாழடைந்த கட்டடத்தில் கேட்ட இரு குரல்கள் பற்றியும் எதிர்வரும் அமாவாசை தினத்தன்று அவர்கள் புதையல் தோண்டி எடுத்து, ஸ்டீம் போட் ஏறித் தப்பிக்க இருப்பது பற்றியும் விரிவாகச் சொன்னான்.

"என்னடா சொல்றே?" என்றான் டில்லி.

"ஆமாடா, அத்தனையும் உண்மை. நானே என் காதால கேட்டேன். வாத்தியார்கிட்டே சொல்லிடலாம்னுதான் முதல்ல நினைச்சேன். ஆனா சின்னப்பசங்க எதையாவது பார்த்துட்டு உளறுவாங்கன்னு நினைச்சிடுவாரோன்னு பயம். ஆனா எனக்கு சந்தேகமே இல்லை. அவங்க அப்படித்தான் பேசிக்கிட்டிருந்தாங்க. நான் கேட்டது சத்தியம்!" என்றான் பாலு.

ஒரு கணம் மிகத் தீவிரமாக யோசித்த டில்லிபாபு, "நா ஒண்ணு சொன்னா நம்புவியா?" என்றான்.

"சொல்லு."

"நீ சொன்னேபாரு, ரெண்டு பேரு, அமாவாசை அன்னிக்கு வரப்போறாங்க, புதையல் எடுக்கப் போறாங்க அப்படின்னு... அதே ரெண்டு ஆளுக, அதே அமாவாசை பேச்சு பேசி நா கேட்டிருக்கேன்!" என்றான் டில்லி.

"என்னது?" அதிர்ந்து போனான் பாலு.

"ஆமாடா. அதே பன்னித்தீவுலதான்... ஒரு நாள் மீன்பிடிக்கப் போனபோது அங்க இறங்கி சாப்பிட்டுக்கிட்டிருந்தோம். உன்னயமாதிரியே நானும் காட்டுக்குள்ளாற சும்மா நடந்து போனேன். அந்தக் கட்டடம்... முன்னாடி எப்பவோ நேவி ஆபீசா இருந்திருக்கு. ஆளுக வந்து போயிக்கிட்டு இருந்திருக்காங்க. அப்புறம் அங்கிருந்து ஆபீசை இடம் மாத்திட்டாங்க. இங்க கட்டடத்தை சும்மா பூட்டு போட்டு வெச்சிருக்காங்க. யாரும் வரதில்லை. தப்பித்தவறி அன்னிக்கு ஒரு நாள் நானும் எங்க சேக்காளிகளும் இந்தப் பக்கம் போக வேண்டியதாயிருச்சி. அப்பத்தான் கேட்டேன்... இதே மேட்டருதான். இன்னாடா இது என்னென்

மற்றவர்களுடைய குணங்களையும் சிந்தனைகளையும் ஆராய்ச்சி செய்பவன் தன் காலத்தை வீணடிக்கிறான்.


- ராமகிருஷ்ண பரமஹம்சர்



ளவோ பேசறானுங்களேன்னு நினைச்சேன். எங்க அப்பாராண்ட கூட சொன்னேன். அதெல்லாம் நீ பேசாத, நமக்கு அதெல்லாம் வாணாம். வேலையப்பாருன்னு சொல்லிட் டாரு..."

"அடப்பாவி! இப்படியாடா விடறது? தீவுல அப்ப ஏதோ மர்மம் கண்டிப்பா இருக்குது!"

"ஆமாடா. அதுல சந்தேகமே இல்ல. நாலஞ்சு பேரு அங்க அடிக்கடி போறாங்க. எங்காளுங்க சிலர் மீன் பிடிக்கப் போவசொல்ல பாத்திருக்காங்க. பேண்ட் போட்ட ஆளுக



எதுக்காக அந்தத் தீவுக்குப் போவணும், என்னா பேசறாங்க, என்ன திட்டம் எதும் புரியல. ஆனா ஒண்ணு, புதையலெல்லாம் ஏதும் அங்க இருக்கும்னு நான் நினைக்கல. இவனுங்க புதையல்னு ரகசிய வார்த்தைதான் சொல்லுறாங்க. வேற ஏதோதான் மேட்டரு" என்றான் டில்லிபாபு.

ரகசிய வார்த்தை! எனில், புதையல் என்று அவர்கள் குறிப்பிடுவது எதை? பாலுவுக்குப் பதற்றம் அதிகரித்தது.

"எதுவா இருந்தா என்னடா? சட்டவிரோத மாத்தான் அவங்க செயல்படறாங்க. விஷயம் நேவி ஆபீசர்களுக்குத் தெரியும் முன்னாடி நமக்குத் தெரிஞ்சது ஏன்னு கடவுளுக்குத்தான் தெரியும். நாமதான் இதுக்கு ஏதாவது செய் யணும். கண்டும் காணாமலும் விடறது தப்பு. ஒரு தப்பு நடக்குதுன்னு தெரிஞ்சப்புறமும் சும்மா இருந்தா அதுதான் பெரிய தப்பு!" என்றான் பாலு.

"நானும் இப்பிடித்தாண்டா நினைச்சேன். ஆனா சின்னப்பையன் நான். நான் என்ன பண்ண முடியும்? எங்கப்பாவே சும்மா இருடான்னு சொல்லிட்டாரு..."

"சரி, இப்ப உன் திட்டம் என்ன?"

பாலு ரகசியக் குரலில் சொன்னான்: "நான் தீர்மானமே பண்ணிட்டேன் டில்லி. இதை சும்மா விடக் கூடாது. எப்படியாவது அவங்க யாரு, அவங்க திட்டம் என்னன்னு நாம கண்டுபிடிச்சே ஆகணும். சின்னப்பசங்களால முடியாதுன்னு எதுவும் கிடையாது. நல்ல காரியங்களைச் செய்ய சின்னப்பசங்க, பெரிய ஆளுங்கன்னு பிரிச்சிப்பார்க்கறது அவசியம் இல்லை.நம்மால எல்லாமே முடியும். தைரியம் தான் வேணும்" என்று சொல்லி நிறுத்தி னான்.

உத்வேகம் கொண்ட டில்லிபாபு, "சொல்லுடா, என்ன செய்யலாம்? நானும் உனக் குத் துணைக்கு இருக் கேன். என்ன செய்யலாம், எப்படி செய்யலாம்?" என்றான் ஆர்வமுடன்.

உற்சாகமடைந்த பாலு தன் திட்டத்தை விவரிக் கத் தொடங்கினான்.

"எனக்கு ஒரே ஒரு விஷயம் சொல்லு. உனக் குப் படகு ஓட்டத் தெரி யுமா?"

"ம்ஹூம், போன தில்லை. ஆனா கட்டுமரம் தள்ளத் தெரியும்" என் றான் டில்லி.

"ஒரு அவசரம்னா உன்னால என்னையும் இன்னொருத்தனையும் வெச்சி கட்டுமரத்துல பன்றித் தீவுக்கு கூட்டிக்கிட்டுப் போக முடியுமா?"

"முடியுமே! அந்த ரூட்டுல ஆழம் கம்மிடா. பயம் வேணாம்" என்றான் டில்லி பாபு.

"அப்ப தயாரா இரு. வர அமாவாசை அன்னிக்கு சாயங்காலம் நீ, நான், இன்னொருத் தன் மூணு பேரும் பன்றித் தீவுக்குப் போறோம்!" என்றான் பாலு.

"யாருடா அந்த இன்னொருத்தன்?" என்று ஆர்வத்தை அடக்கமாட்டாமல் கேட்டான் டில்லிபாபு.

"பொறுமை! பொறுமை! அமாவாசை அன்னிக்குத் தெரியும்!" என்று சஸ்பென்ஸ் வைத்துவிட்டு, "நான் வரேண்டா" என்று கிளம்பி ஓடிப்போனான் பாலு.

(தொடரும்)



ஜெல்லி

மூளை, இதயம், கண், எலும்புகள் இல்லாத உயிரினம் இருக்க சாத்தியம் உண்டா? அப்படி ஓர் உயிரினம் இவ்வுலகில் இருக்க வாய்ப்பில்லை என்று தான் தோன்றும். ஆனால் பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக அப்படிப்பட்ட ஓர் உயிரினம் பூமியில் வசித்து வருகிறது என்றால் அது ஆச்சர்யமான விஷயம் தான்! அதன் பெயர் ஜெல்லி மீன்.



மீன் என்று நாம் அழைத்தாலும் ஜெல்லி, மீன் வகையைச் சேர்ந்த உயிரினம் அல்ல.

ஜெல்லி மீனின் உடல் 95% தண்ணீரால் ஆனது. நீங்கள் இனிப்பான ஜெல்லியை சாப்பிட்டிருப்பீர்கள். இதன் உடலும் அதே போல் வழவழப்பாக, மென்மையாக இருக்கும். இவற்றின்

எஸ்.சுஜாதா





அடிப்புறத்தில் வாய் இருக்கும். வாயைச் சுற்றிலும் உணர் கொம்புகள் காணப்படுகின்றன. இந்த உணர் கொம்புகள் மூலமே ஜெல்லி மீன் தன் இரை, எதிரி போன்றவற்றை அறிந்து கொள்கிறது.


கண்ணும் மூளையும் இல்லாவிட்டாலும் ஜெல்லி மீன் எதிரியை விட்டு விடுவதில்லை. தன்னிடமுள்ள கொடுக்கால் எதிரியைக் கொட்டி விடும். எதிரியின் மேல் இந்தக் கடி சிறிய புண்ணிலிருந்து, உயிர் போகக் கூடிய அளவுக்கு வரை பாதிப்பை உண்டாக்கும்.

மீன் முட்டைகளில் இருந்து வெளிவரும் லார்வாக்கள் தான் ஜெல்லி மீனின் முக்கிய உணவு. இது தவிர கடலில் மிதக்கும் சிறிய

மீன்


உயிரினங்களையும் சாப்பிடக் கூடியது.

இவற்றில் 200க்கும்





மேற்பட்ட வகைகள் உள்ளன. ஜெல்லி மீன்கள் உலகில் உள்ள அனைத்து கடல்களிலும் வாழ்கின்றன.





இது தவிர ஆறுகள், நன்னீர் ஏரிகளிலும் ஜெல்லிகள் உண்டு.


ஜெல்லி மீன்கள் இரண்டு வழிகளில் நகர்கின்றன. சில ஜெல்லிகள் உணர் கொம்புகளின் உதவியுடன் நீந்துகின்றன. சில ஜெல்லிகள் மற்ற பிராணிகளைப் பிடித்துக் கொண்டு இடம் பெயர்கின்றன.

மருத்துவத் துறைக்கும் அறிவியல் ஆய்வுகளுக்கும் ஜெல்லி மீன்கள் மிகவும் பயன்படுகின்றன.

ஒளி புகக் கூடிய அளவுக்கு உடலமைப்பு கொண்ட ஜெல்லி 3 மில்லி மீட்டர் முதல் 2 மீட்டர் அளவு வரையிலும் கூட பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றன.

நீலம், ஆரஞ்சு, மஞ்சள், பிரௌன், வெள்ளை மற்றும் இளஞ் சிவப்பு நிறங்களில் ஜெல்லிகள் காணப்படுகின்றன.

பானர் மீன், ஆரோ நண்டு மற்றும் கடல் ஆமைகள் ஜெல்லிமீனின் எதிரிகள்.



டீ.வியை சரியாகப் பயன்படுத்தலாம்!

எங்கள் எண்ணங்கள்...

டீ.வி. பார்ப்பதால் வீட்டிற்கு வரும் விருந்தினர், நண்பர்களுடன் மனந்திறந்து பேச முடிவதில்லை. மாணவர்களின் படிப்பும் வீணாகிறது. ஓடியாடி விளையாட வேண்டிய குழந்தைகள் பொன்னான மாலைப் பொழுதுகளை வீணாக்கி அதற்கு அடிமையாகி விடுகின்றனர். அவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள முடிவதில்லை. படம் வரைதல், கதைப் புத்தகம் படித்தல், விளையாட்டு, குடும்பத்தினரோடு மகிழ்ச்சியாக உரையாடுதல் எல்லாமே குறைந்து போய், பொழுது போக்காக இருந்த டீ.வியே வாழ்க்கை என்றாகிவிட்டது. எனவே டீ.வி. திறமைகளைக் குறைக்கும் சாதனம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.


- எஸ். உமா,
சோமரசம் பேட்டை

டீ.வி. எவ்வளவோ நல்ல விஷயங்களைத் தந்தாலும் அதிலேயே லயித்து விடக் கூடாது. ஏனெனில் நம்முடைய நடைமுறை காரியங்கள் பாதிக்க நேரிடும். அதற்காக 'டைம்' ஒதுக்கி டீ.வி பார்ப்பது சாலச் சிறந்தது. டீ.வியால் அரிய பல விஷயங்களை அறிந்து கொள்வதோடு மேலும் நமக்குள்ள திறமைகளையும் வளர்த்துக் கொள்ளலாம். எதையும் செய்ய வேண்டிய நேரத்தில் செய்தால் எதனாலும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. டீ.வி. இன்றைக்கு நமது சமுதாயத்திற்கு கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷம். அதை நாம் நமது நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைக்குப் பலர் டீ.வி முன் உட்கார்ந்து விட்டால் வேறு வேலைகளையே மறந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட டீ.வி. நிகழ்ச்சி தேவைதானா என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. டீ.வி நமக்காகத்தான். டீ.விக்காக நாமில்லை என்பதை உணர வேண்டும். டீ.வியிலேயே மூழ்கி விடுபவர்களின் திறமைகள் குறைய வாய்ப்பிருக்கிறது. அதனால் டீ.வியில் சீரியல்கள் பார்ப்பவர்கள் தங்கள் கடமைகளையும் மறந்து விடக் கூடாது.

- வீ. கலாதேவி,
பத்தாம் வகுப்பு,
அ.பெ.மே.நி.பள்ளி,
சேலம்

இப்பொழுதெல்லாம் எண்ணற்ற தாய்மார்கள், குழந்தைகள் எல்லோருமே டீ.வி.பார்க்க ஆரம்பித்து விட்டனர். டீ.வியைப் பொழுது போக்குக்காகவும், பொது அறிவுக்காகவும், செய்திக்காகவும் பார்ப்பது தவறு இல்லை. எப்பொழுதுமே டீ.வி. பார்ப்பது தவறு. விவேக்கைப் போல் டீ.வியை அதிகம் பார்த்தால் கண் பாதிக்கப்படும். இதனால் படிப்பும் பாதிக்கப்படலாம். எனவே அதிகம் டீ.வி. பார்க்காமல், விளையாட்டு, படிப்பு போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். டீ.வி. பார்ப்பதால், நமக்குச் சிறிதளவு மட்டும் தான் நன்மை. அதற்குப் பதிலாக கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். காலம் பொன் போன்றது.

- அ. ஜெரி, பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப் பள்ளி, நல்லூர்,
திருவண்ணாமலை





அன்புள்ள ஜக்கு...

ஒற்றுமைக்கு காகம், சமாதானத்துக்கு புறா, மனிதன்?





● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

? ஒற்றுமைக்கு காகம், சமாதானத்திற்கு புறா, தந்திரத்திற்கு நரி, மனிதன் எக்குணத்திற்கு ஒப்பானவன் ஜக்கு?

உணவு, அபாயம், துக்கம் போன்றவற்றை தன் சகாக்களை அழைத்து பகிர்ந்து கொள்வதால் காகத்தை ஒற்றுமைக்கு உதாரணம் சொல்லலாம். புறா ஒரு புத்திசாலிப் பறவை மட்டுமல்ல, மிகவும் சாதுவானதும் கூட. அந்தக் காலத்தில் புறாக்களைத் தூது விட்டு சமாதான முயற்சியைக் கையாண்டதால் சமாதானச் சின்னமாகச் சொல்லலாம். ஆனால் தந்திரத்துக்கு நரியா? இது தவறான செய்தி. ஒவ்வொரு பிராணியும் உணவை வேட்டையாடுவதிலும் எதிரியிடமிருந்து தற்காத்துக் கொள்வதிலும் சில விஷயங்களைக் கடைப் பிடிக்கின்றன. அதே போல்தான் நரியும். எனவே ஸ்பெஷலாக நரிக்குத் தந்திரமெல்லாம் கிடையாது. 3, 4 அறிவுள்ள பிராணிகளுக்கு ஏதோ ஒரு குணம் உண்டு. ஆனால் மனிதன் ஆறறிவு படைத்தவன். அன்பு, கருணை, ஒற்றுமை, சமாதானம், கோபம், நம்பிக்கை என எல்லா குணங்களையும் உள்ளடக்கியவனாக இருக்க வேண்டும்.

● வே. ரதி, சிவகாசி

? பிளாக் & ஒயிட் டீவிக்குத் தேவைப்படும் மின்சாரத்தை விட கலர் டீ.விக்கு அதிக மின்சாரம் தேவை என்று என் தோழி சொல்கிறாள். உண்மையா ஜக்கு?

உங்கள் தோழி கலர் டீ.வி கேட்டு நச்சரிக்கிறார் போலிருக்கிறது. அதான் யாரோ இப்படி சொல்லி விட்டார்கள். எல்லா டீ.விக்கும் ஒரே அளவு மின்சாரம் தான் செலவாகும் ரதி.

● எம். வினோத், சங்கரன்கோவில்

? ஜக்கு, உன் பெயரில் ரஜினிகாந்த் படம் எடுக்கிறாரே, இதனால் உன் புகழ் மேலும் பரவுமா?

ஜக்கு என்று எனக்குப் பெயர் வைத்தாலும் வைத்தார்கள், வினோத் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஜக்குபாய் என்று கண்ணில்படும் போது உங்களுக்கு என் நினைவு வருகிறதே, அதைவிட பெரிய விஷயம் ஒன்றும் இல்லை வினோத்.

● கோ. பாலசுப்பிரமணி, நல்லூர்

? கோகுலத்துக்கு குழந்தை பாடல் எழுதி அனுப்பினால் வெளியிடுவார்களா ஜக்கு? எனக்காக நீ கொஞ்சம் சிபாரிசு பண்ணுவியா ஜக்கு?

குழந்தைப் பாடல்களை யார் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம் பாலசுப்பிரமணி. சிறந்த பாடலாக இருந்தால் நிச்சயம் கோகுலத்தில் இடம் பெறும். என்னுடைய சிபாரிசு தேவையில்லை. கவலைப் படாமல் அனுப்பி வையுங்கள்.




நீண்ட காலத்துக்கு முன்பு மகத நாட்டை விஸ்வதர்ஷா என்ற மன்னர் ஆண்டு வந்தார். ஒருமுறை மன்னரின் கொள்கைகளைப் பிடிக்காமல் சிலர் கலகம் செய்தனர்.
மஹாராஜா, கலகக்காரர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.
துரோகிகளை வென்றவர்!
படை தயாராகட்டும். நானே தலைமை ஏற்கிறேன்.
மன்னரின் படை கலகக் காரர்களை அடைந்தது.
மஹாராஜா, உத்தரவிடுங்கள், கலகக்காரர்களை வெட்டிச் சாய்க்கிறோம்.
பொறுங்கள்
மன்னர் கலகக்காரர்களிடம் சென்றார்.
நாங்கள் போர் புரிய வரவில்லை. உங்கள் பிரச்னைகளைத் தீர்க்கவே வந்திருக்கிறோம்.
© JUNGLE BELL CREATIONS
மன்னரின் பேச்சைக் கேட்டு கலகக்காரர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டனர்.
மஹாராஜா வாழ்க!
மந்திரியும் படைத் தளபதியும் மன்னரின் செயலை விரும்பவில்லை.
என்ன செய்கிறீர்கள் அரசே? துரோகிகளைக் கொன்று விடுவோம்.


ஆணையிடுங்கள் மன்னா.
மஹாராஜா, தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறோம்.
துரோகிகள் இறந்து விட்டனர். இவர்கள் தேசப் பற்றுடையவர்கள்.
மஹாராஜா, அவர்கள் செய்த கலகங்களை மறந்து விட்டீர்களா? அரசர் என்ற முறையில் தண்டனை வழங்குங்கள்.
அரசனின் கடமை என்பது எதிரிகளிடம் அன்பையும் துரோகிகளிடம் கருணையும் காட்ட வேண்டும்.
போர் முடிந்தது. இனி நாம் அனைவரும் நண்பர்கள்
விரோதிகள் அழியவில்லை. விரோதம் மட்டுமே அழிந்தது.

ஹலோ சுகமா?

விலங்குகளால் சிரிக்க முடியுமா?

● வா. ஜீவராஜன், அறந்தாங்கி

? கீரைகளைச் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என்று பொதுவாகக் கூறுகிறார்கள். எப்படி என்பதை விளக்குங்கள் டாக்டர்?

! நம் உடல் வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின் ஏ, பி, சி, சத்துகளும் இரும்புச் சத்து, பாஸ்பரஸ், கால்சியம், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம் போன்ற தாதுச் சத்துகளும் கீரைகளில் அதிகமாக உள்ளன. கீரைகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் ரத்த சோகை ஏற்படாது. கண் பார்வை சிறக்கும். தோல் நோய்கள் வராது. வாய்ப்புண் உண்டாகாது. நரம்புகள் நன்கு செயல்படும். மூளை சோர்வடையாமல் வேலை செய்வதற்கு இவை உதவும். சில கீரைகள் மருந்தாகவும் செயல்பட்டு நோய்களைத் தீர்க்க உதவும். முக்கியமாக இவை வளரும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும். கீரைகளில் அரைக்கீரை, தண்டுக் கீரை, பருப்புக்கீரை, முளைக்கீரை, பசலைக் கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, சிறுகீரை, முருங்கைக்கீரை, குப்பைக்கீரை, வல்லாரைக்கீரை எனப் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு கீரையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட சத்துகள் உள்ளன. மேலும் கீரைகள் இயற்கையாக விளை நிலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விலை மலிவாகவும் கிடைக்கிறது. அவரவர் வீட்டிலும் விளைவித்துக் கொள்ளலாம்.



● ச. சேஷாசலம், சென்னை - 8

? மனிதனைப் போல் விலங்குகளால் சிரிக்க முடியுமா?

! மனிதனுக்கு உள்ளதைப் போல் எல்லா விலங்குகளுக்கும் நகைச்சுவை உணர்வு இருப்பதில்லை. என்றாலும் கொரில்லா, சிம்பன்ஸி போன்ற சில விலங்குகளுக்கு நகைச்சுவை உணர்வு உள்ளது. இவை அவ்வப்போது சிரிப்பை வெளிப்படுத்துவதும் உண்டு. பிற விலங்குகளுக்கு நகைச்சுவை உணர்வு இல்லா விட்டாலும் கூட தங்கள் மகிழ்ச்சியை இவை சில செய்கைகளால் வெளிக் காட்டுவது உண்டு. முதலாளி வந்ததும் நாய் வாலாட்டுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.




● ந. இந்திரா, கோபிச்செட்டிபாளையம்

? எனக்கு வயது 12. எனக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக இளநரை உள்ளது. இளநரையைப் போக்க என்ன சிகிச்சை உள்ளது டாக்டர்?

! இளநரை பொதுவாக பரம்பரைத் தன்மை காரணமாக வருவதுண்டு. இளநரையைப் போக்க இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கவில்லை. குடும்ப மருத்துவரின் உதவியுடன் உனக்குப் பொது உடல் நலன் நன்றாக உள்ளதா என்பதைத் தெரிந்து கொள். சிலருக்குச் சத்து குறைவு இருந்தாலும் இளநரை தோன்றுவதுண்டு. நீ சாப்பிடும் உணவு எல்லா சத்துகளும்

அடங்கிய சமச்சீர் உணவாக இருக்க வேண்டியது முக்கியம். தானியங்கள், பருப்பு மற்றும் பயறு வகைகள், காய் கறிகள், கீரைகள், பழங்கள், பால், தயிர் போன்றவை உன் தினசரி உணவில் இடம் பெறுதல் வேண்டும். அத்தோடு மருத்துவரின் ஆலோசனைப்படி இரும்புச்சத்து, புரதச்சத்து மற்றும் துத்த நாகச்சத்து அடங்கிய மாத்திரைகளைச் சாப்பிடலாம். மருதாணி, செம்பருத்தி, கரிசலாங் கண்ணி கலந்த இயற் கைத் தைலங்களைத் தலையில் தேய்க்கலாம்.



● எ. கோகுலகிருஷ் ணன், சென்னை -2

? *'ஆர்த்திரோஸ் கோப்பி'* *(Arthroscopy)* *என்றால் என்ன டாக்டர்?*



! இது ஒரு மூட்டு உள்நோக்கிக் கருவி. முழங்கால், முழங்கை, கணுக் கால், மணிக்கட்டு, தோள் பட்டை, கீழ்த் தாடை போன்ற எலும்பு மூட்டுப் பகுதிகளில் ஏற்படும் நோய்களைத் துல்லியமாகக் கண்டறியவும், அவற்றுக்குச் சரியான சிகிச்சை அளிக்கவும் இது பயன்படுகிறது. சுமார் 4 மி.மீ. கனத்தில் தண்டு போலிருக்கும் இக்கருவியை, மூட்டில் சிறிய துளை போட்டு, அந்தத் துளை வழியாகச் செலுத்தி, மூட்டின் உள் பகுதியை நேரில் காணலாம். நோயைக் கணிக்கலாம். நோய் பாதிப்பின் அளவைத் தெரிந்து கொள்ளலாம். எலும்பு மூட்டை முழுவதுமாகத் திறக்காமல் அறுவை சிகிச்சை செய்து நோயை சரி செய்யலாம். குறிப்பாக, விபத்துகளால் ஏற்படும் கிழிந்த இணைப்பிழைகள் மற்றும் தசைநாண்கள், சிதைந்த குருத்தெலும்புகள், எலும்பு உள்முறிவுகள் போன்றவற்றைக் குறைந்த நேரத்தில், எளிய முறையில் குணப்படுத்திவிடலாம்.

புதிர் இங்கே! விடை கீழே!


1. எந்த வைட்டமின் குறைந்தால் மாலைக் கண்நோய் வரும்?
   அ. வைட்டமின் - ஏ
   ஆ. வைட்டமின் - பி
   இ. வைட்டமின் - சி
2. அம்மை நோய்க்குத் தடுப்பூசியைக் கண்டுபிடித்தவர் யார்?
   அ. ரிச்சர்ட் டென்னிஸ்
   ஆ. வில்லியம் ஹார்வி
   இ. எட்வர்ட் ஜென்னர்
3. அக்குபங்சர் மருத்துவம் எந்த நாட்டில் தோன்றியது?
   அ. ஜப்பான் ஆ. சீனா இ. அமெரிக்கா
4. மதுவால் பாதிக்கப்படும் முக்கிய உறுப்பு எது?
   அ. இரைப்பை ஆ. மூளை இ. கல்லீரல்
5. அந்தமானில் எந்த நோய் இல்லை?
   அ. காலரா ஆ. வெறிநாய்க்கடி நோய்
   இ. டெங்கு காய்ச்சல்

புதிர் விடை:

1. அ 2. இ 3. ஆ 4. இ 5. ஆ

டாக்டர் கு. கணேசன்



கோகுலம்
போஸ்டர்



விம்பிள்டன் சாம்பியன்–2004

மரியா ஷரபோவா





கோடீஸ்வரர் ஆவது

நெட் பிட்ஸ்

முதலில் பொது அறிவு சம்பந்தமான கேள்விகள். முதல் கேள்வி... மனிதர்களைப் போல, விலங்குகளைப் போல, தாவரங்கள் இரவு நேரத்தில் தூங்குமா?

ஆம். தாவரங்களும் இரவில் தூங்கும். ஆனால் மனிதர்களைப் போல, பகலெல்லாம் வேலை செய்து, களைப்பு ஏற்படுவதால், ஓய்வு எடுப்பதற்காக தாவரங்கள் தூங்காது. சூரிய வெளிச்சம் இல்லாத காரணத்தால், தாவரங்கள் தூங்கும். சூரிய வெளிச்சம் இருக்கும்போது, தாவரங்கள் உணவு தயாரிக்கும். இரவு நேரத்தில் இது நடைபெறாது.

இதை நிரூபிக்க வேண்டுமானால், ஒரு செடியை முதலில் சூரிய வெளிச்சம் நன்றாகப் படும் இடத்தில் வையுங்கள். அதையே அடுத்து, சில்லென்ற, இருண்ட அறைக்குள்ளே கொண்டு போய் வையுங்கள்.


சூரிய வெளிச்சத்தில் பரந்து, விரிந்து இருக்கும் செடியின் இலைகள், இருட்டில் வைத்திருக்கிற சமயத்தில் கவிழ்ந்தும், இதழ்கள் மூடியும் இருக்கும்.

ரப்பர் எப்படி புழக்கத்துக்கு வந்தது தெரியுமா?

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் தென் அமெரிக்காவிலிருந்து, ஒரு பிரிட்டிஷ் வியாபாரிக்கு ரப்பர் மரத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட ரப்பர் கொஞ்சம் கிடைத்தது. ஆனால் அந்த வியாபாரி, 'இதனால் ஒரு பயனும் இல்லை' என்று நினைத்து தன் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்து விட்டார். அந்தக் குழந்தைகளுள் ஒன்று, தனது நண்பனான ஜோஸப் பிரீஸ்ட்லி என்கிற பையனுக்கு அதில் கொஞ்சம் கொடுத்தது.

அதை வைத்து விளையாடிக் கொண்டிருந்த ஜோஸப், அந்த ரப்பரைப் பயன்படுத்தி, பென்சிலால் எழுதியவற்றை அழிக்க முடியும் என்று கண்டுபிடித்தது எதிர்பாராமல் நடந்த கண்டுபிடிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்தது ஒரு புதிர். கீழே உள்ள மூன்று கோடுகளையும் பாருங்கள். மூன்றில் மிக நீளமான கோடு எது, மிகவும் சிறிய கோடு எது என்று ஸ்கேல் எதுவும் பயன்படுத்தாமல், கண்களாலேயே அளவெடுத்து, சரியாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்! விடை கடைசியில்.




இது சிரிப்பு டைம்:

"என் கூடப் படிக்கிற மாணவர்கள் மட்டுமில்லை. என் ஆசிரியரையே கூட திணற அடிக்கும் படி என்னால் ஒரு காரியம் செய்ய முடியும்" என்றான் ஒரு பையன்.

இந்த விஷயம் வகுப்பு ஆசிரியரின் காதுக்கு எட்டிவிட்டது.

பையனைக் கூப்பிட்டார். "என்ன காரியம் அது? எங்கே செய்து காட்டு பார்க்கலாம்" என்றார்.

பையன் சாக்பீஸை எடுத்துக் கொண்டு போய் கரும்பலகையில் ஏதோ எழுதினான்.



எப்படி?




இந்தப் படத்தைப் பாருங்கள். அருவி கொட்டுகிறதா? நன்றாகப் பாருங்கள். அருவி நீரில் பெண்கள் தெரிவார்கள்!

"எங்கே என் கையெழுத்தைப் படித்து விடுங்கள் பார்க்கலாம்!" என்றான்.

ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வெயில் காலம். அவருக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் தரும்படி நர்ஸிடம் கேட்டார். "கொஞ்சம் ஐஸ் கட்டி போட்டுக் கொடுத்தால் தண்ணீர் ஜில்லென்று நன்றாக இருக்கும்" என்றார்.

நர்ஸ், அந்த நோயாளியின் உணவு குறிப்புகளைப் பார்த்துவிட்டுச் சொன்னார்!

"ஸாரி! உங்களுக்கு ஐஸ் கட்டி போட்டு தண்ணீர் கொடுப்பதற்கில்லை. காரணம், இன்னும் ஒரு வாரம் உங்



களுக்கு வெறும் திரவ உணவுதான். திடப் பொருள் சாப்பிடக் கூடாது என்று டாக்டர் கண்டிப்புடன் சொல்லி இருக்கிறார்!"

கோடீஸ்வரர் ஆவது எப்படி என்ற புத்தகத்தை ஒருவர் படித்து முடித்தார்.

அவரது நண்பர் அந்தப் புத்தகத்தைப் படிக்க விரும்பி, கடன் கேட்டார்.

புத்தகத்துக்குச் சொந்தக்காரர், நூறு பக்க புத்தகத்தில் ஒரு பக்கத்தை மட்டும் கிழித்துக் கொடுத்து விட்டுச் சொன்னார்: "முதலில் இதைப் படித்து விட்டு லட்சாதிபதி ஆகிவிடு. அப்புறம் மீதியைப் படித்துக் கோடீஸ்வரன் ஆகலாம்!"

அடுத்தது நெட்டில் படித்த ஹெல்த் டிப்ஸ்:

ஆரஞ்சு ஜூஸ் குடித்தால் உடம்புக்கு ரொம்ப நல்லது. குறிப்பாக இதயத்துக்கு நல்லது. அதில் வைட்டமின் சி,பொட்டாசியம், போன்றவை இருக்கின்றன.

ஆரஞ்சு ஜூஸ் குடிக்கலாம் என்றவுடன் உடனே ஆரஞ்சு குளிர்பானங்கள் வாங்கிக் குடிக்க ஆரம்பித்து விடாதீர்கள். அவை உடம்புக்குக் கெடுதல் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

விடை: மூன்று கோடுகளும் பார்க்க நீளத்தில் வேறுபட்டவை போலத் தோன்றினாலும் கூட, மூன்றுமே ஒரே நீளம்தான். சந்தேகம் இருந்தால் ஒரு ஸ்கேல் வைத்து அளந்து பார்த்து விடுங்கள்!

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி

அம்மியுடன் குழவியுடன்

வடக்கே தேவ நகரத்தில் மாதவராவ் தானிய வியாபாரம் செய்து வந்தார். நல்லொழுக்கமே வடிவான அவரது மகனின் பெயர் துக்காராம். இவரை நாம தேவரின் மறுபிறவி என்பார்கள். இவர் குரலினிமையும், சங்கீத ஞானமும் கொண்டவர். பேரறிஞரான இவருக்கு கவிதைகள் புனையும் ஆற்றலும் இருந்தது.

துக்காராமின் மனைவி கமலாபாய். மாடுகளின் மேல் தானியங்களை ஏற்றி விற்பதற்குக் கொண்டு போகும் துக்காராம், வரும் போது வெறும் கோணியைத் தான் எடுத்து வருவார். அத்தனையும் பணமாகி விட்டதா என்றால் அதுதான் இல்லை! இரக்க குணமுள்ள அவர் பெரும் பகுதியை யாசிப்பவர்களுக்கு இனாமாகக் கொடுத்திருப்பார்.

இதனால் கோபம் கொண்ட அவரது பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியேறினர். கமலாபாய் சினந்தாலும் ஒரு மார்வாடியிடம் இருநூற்றி ஐம்பது ரூபாய் கடனாக வாங்கிக் கொடுத்து வியாபாரத்தைத் தொடரும்படிக் கூறினாள்.

துக்காராமும் தானியங்களை வாங்கிக் கொண்டு மாடுகளின் மீதேற்றி சந்தைக்குச் சென்றார். மழை வரும் போல் வானம் இருந்தது. மழையில் தானியங்கள் சேதமாகி விடுமே என்று மாடுகளை ஒரு பெரிய ஆலமர நிழலில் கட்டி விட்டு தானும் மரத்தின் மீதேறி வசதியாக உட்கார்ந்து கொண்டு திருமாலைக் குறித்து பஜனை செய்யலானார்.

இடி மின்னலோடு மழை கொட்டியது. துக்காராமின்



ஓடி வந்த பக்தை!

ஆர்.பொன்னம்மாள்


பஜனையும் உச்சஸ்தாயிக்குச் சென்றது. துக்காராம் தன்னையே மறந்தார். சூரிய அஸ்த மனமானபின் களைப்பில் அப்படியே உறங்க லானார்.

வெய்யில் 'சுள்'ளென்று சுட கண் விழித் தார் துக்காராம். கட்டிய இடத்தில் மாடுகளைக் காணாமல் பதறியபடி கீழே இறங்கினார். தானிய மூட்டைகள் அவிழ்ந்து, ஓடும் தண்ணீரில் சிதறியிருந்தன.

"ஐயோ! கமலா சொல்வது போல் நான் பக்திப் பைத்தியம் தான்! ஒன்றுக்கும் உதவா தவன். ஒரு மாதத்தில் கடனை வட்டியோடு எப்படி திருப்பித் தர முடியும்? மாடுகளைப் புலி அடித்து தின்னும்படி அஜாக்கிரதையாய் இருந்த பாவி நான்! எனக்கெல்லாம் குடும்பம் எதற்கு? வீடெதற்கு? இங்கேயே ஈசுவரத் தியானம் செய்து கொண்டு வாழ்வைத் தொலைக்க வேண்டியதுதான்" என்றவர் ஒரு பாறையில் பத்மாசனமிட்டு யோகத்தில் அமர்ந்தார்.

மாடுகளின் கழுத்து மணி சத்தம் கேட்டு வெளியில் வந்தாள் கமலா. முந்நூற்றி ஐம்பது ரூபாய்களை அவளிடம் கொடுத்த துக்காராம், "மாடுகளைக் கொல்லையில் கட்டி விட்டு குளித்துவிட்டு வருகிறேன்" என்றார்.

கமலாவின் மகிழ்ச்சியைச் சொல்லி மாளாது! "நூறு ரூபாய் லாபமா? மழையிலே தானியங்கள் எங்கே விற்கப் போகிறதென்று



பயந்தோமே!" என்று திக்குமுக்காடியவள் 'கடனை நாணயமாகத் திருப்பிக் கொடுத்தால் தான் எதிர்காலத்தில் அவசரம், ஆத்திரமென்றால் வாங்கலாம்' என்றபடி இருநூற்றி ஐம்பது ரூபாயோடு மார்வாடியைத் தேடிச் சென்றாள்.

இவளைப் பார்த்ததும் மார்வாடி கைகூப்பி, "அம்மணி! தங்கள் கணவர் அசலும் வட்டியும் கொடுத்து விட்டு ரசீதை வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டார். இந்தாருங்கள் ரசீது" என்று நீட்டினார்.

கமலாவுக்கு மயக்கம் வரும் போலிருந்தது. 'இரட்டிப்பு லாபமா?' என பிரமித்தபடி வீடு திரும்பினாள்.

ஆற்றுக்கு நீராடச் சென்ற கணவன் சூரிய அஸ்தமனமாயும் வீடு திரும்பாதது கண்டு மனம் குழம்பினாள் பேதை. அப்போது மாடு மேய்க்கும் சிறுவர்கள், "அம்மா! தங்கள் புருஷன் காட்டிலே தியானம் பண்ணிட்டிருக்காரு" என்று அடையாளமும் சொன்னார்கள்.

கமலா காட்டுக்கு ஓடி துக்காராமைக் கண்டுபிடித்தாள். "ஸ்நானம் பண்ண போனவர் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறீர்களே! உங்களுக்குப் பசிக்கவில்லையா? என் மீது கோபமா?" என்று கேட்க, துக்காராம் திகைத்தார்.

"கமலா! உன்னைக் கோபிக்க எனக்கென்ன யோக்யதை? மாட்டையும் காணவில்லை! மழை ஜலத்தில் தானியங்கள் வீணாகி விட்டன. உன் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுக் கொண்டு நான் வீட்டுக்கே வரவில்லையே!" கணவன் பேசியதைக் கேட்டு கமலா குழம்பினாள்.

பிறகு இருவரும் நடந்ததைப் பகிர்ந்து கொள்ள, வந்தது பெருமாளே என நிச்சயம் செய்து கொண்டனர். கமலாவுக்குத் திருமால் தரிசனம் கிடைத்தது பற்றி ஆனந்தித்தார்.

"கமலா! மார்வாடி பணம் கொடுத்து உதவியதற்காக அவனுக்கும் காட்சி கொடுத்திருக்கிறார். நான் தான் பாவி" என்று துக்காராம் புலம்ப, "அவன் உங்கள் வடிவமாக வந்தது உங்களுக்குப் பெருமையல்லவா?" என்று சமாதானம் சொன்னாள் கமலாபாய். இருவரும் இப்படி பேசியபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

ஒரு விவசாயி, "சாமி! வீட்டிலே பாடுகிற பாட்டை என் தோட்டத்திலே வந்து பாடினா பறவைகள் தானியங்களைத் தின்னாமலிருக்குமே! சும்மா பாட வேணாம்! பணம் தரேன்" என்றான்.

'கண்ணன் கருணை' என்றபடி பரணில் கவண்கல்லோடு ஏறி உட்கார்ந்து பாடினார். பறவைகள் தானியங்களைத் தின்னத் தொடங்கின.

'வெட்ட வெளியில் பயிர்கள் விளைகின்றன. பெய்வதற்காக மழையும், ஒளி தருவதற்காக சூரிய சந்திரர்களும் கூலி வாங்குவதில்லை! விதை விதைத்த குடியானவனுக்கும் கொஞ்சம் லாபம் கிடைக்கும். பறவைகளுக்கு ஏது பணம்? எந்தக் கடையில் போய் தானியம் வாங்கும்?' என்றெல்லாம் யோசித்து விரட்டாமல் இருக்க, பறவைகள் சுதந்திரமாகப் பயிரைச் சூறையாடின!

மற்ற உழவர்கள் இதை உரிமையாளனிடம் கூற அவன் ஓடி வந்து சோளத் தட்டையால் இவரை அடிக்கத் தொடங்கினான். அருகிலிருந்த ஒரு பெண் அவனைத் தடுத்து, "இவர் நாராயண பக்தர். ஒரு அம்மையாருக்கு இவர் மேல் அளவு கடந்த பக்தி. 'துக்காராம்!

மற்றவர்களின் சொத்துக்களுக்கு கெடுதல் ஏற்படாத வகையில் உன் சொத்தைப் பயன்படுத்திக் கொள்.

- அண்ணல் காந்தியடிகள்



என்கிட்டே இருக்கிறதெல்லாம் இந்த ஓட்டைச் சொம்புதான். இதை விற்று வீட்டுக்கு எடுத்துப் போ' என்றாள். இவர் கைபட்டதும் அது தங்கமானதை நான் கண் கூடாப் பார்த்தேன். அறுவடையானதும் சென்ற வருஷத்தை விட விளைச்சல் குறைந்திருந்தால் இவருக்குத் தண்டனை கொடுக்கலாம்'' என்று சமாதானப்படுத்தி துக்காராமை வீட்டுக்கனுப்பினார்.

அறுவடை முடிந்தது. எல்லா விவசாயிகளையும் விட அவனுக்கே அதிக விளைச்சல்!



இது எப்படி என்று அனைவரும் திகைத்தனர்.

அன்று ஏகாதசி. ஓர் ஏழைப் பெண், "ஐயா, மானத்தைக் காக்க ஒரு கிழிஞ்ச சேலையாவது கொடுத்து உதவணும்'' என்று கெஞ்சினாள். கொடியிலே உலர்ந்து கொண்டிருந்த கமலாபாயின் புடைவையை உருவி அவளிடம் நீட்டினார் துக்காராம்.

புறக்கடையில் உலர்த்திய புடைவையைக் காணாமல் திகைத்த கமலா, 'யாராவது திருடியிருப்பார்களோ' என்று புறக்கடைக் கதவைத் திறந்து பார்த்தாள்.

தெருக் கோடியில் ஓர் ஏழைப் பெண் தன் புடைவையில் செல்வதைக் கண்டு ஓடிச் சென்று மடக்கினாள்.

"ஏதடி இந்தச் சேலை?" என அதட்டினாள்.

"உங்க வீட்டுக்காரர் தான் கொடுத்தார்'' என்றாள் அவள். கமலா பாய்க்கு அடக்க முடியாமல் கோபம் வந்தது. 'அவரைச் சொல்லிக் குற்றமில்லை. இவரை இப்படி படுத்துகிறானே, அந்தப் பாண்டுரங்கனைத் தண்டிக்க வேண்டும்' என்று வீட்டுக்கு வந்து அம்மிக்குழவியைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

துக்காராம், ''கமலா! என்ன ஆச்சு? அம்மிக்குழவியோடு எங்கே ஓடுகிறாய்?'' என்று தடுத்துப் பார்த்தார். திமிறிக் கொண்டு ஓடுமளவு கமலாவுக்கு ஆத்திரம் இருந்தது.

கமலாபாய் கோயிலுக்குள் நுழைந்ததும் ஆலயக் கதவுகள் மூடிக் கொண்டன. ருக்மணி தேவி கமலாவின் புடைவையுடன் எதிரே வந்தார்.

''பல பக்தர்கள் ரங்கன் திருவடியை நீராட்டி, பூத்தூவி வணங்குகிறார்கள். கல் கொண்டு நசுக்க வந்த பக்தையே! ஒன்று கொடுத்தால் தான் அது பலவாகப் பெருகும். திரௌபதி கொடுத்த துண்டு துணிதான் துரியோதனன் சபையில் புடைவைகளாகப் பெருகி அவள் மானம் காத்தது. ஒரு பருக்கை சோற்றை அமுத சுரபியிலிருந்து கிருஷ்ணன் உண்டதால் தான் துர்வாசருக்கும் அவரது சீடர்களுக்கும் பசி நீங்கி வயிறு நிறைந்தது! குசேலர் கொடுத்த அவல் தான் அவருக்கு குபேர சம்பத்தை அளித்தது! இனி உனக்குப் புடைவைப் பஞ்சமே வராது'' என்றருளினார்.

கமலாவின் மேனியில் புது பட்டுப் புடைவை! மேனியெங்கும் வைர, வைடூரியங்களிலான நகைகள்!


கமலா தன் தவறை உணர்ந்து மன்னிக்கும்படி வேண்டி அழுதாள். வணங்கி ஸ்துதித்தாள்.

கதவுகள் திறந்தன. துக்காராம் நடந்ததைக் கேட்டதும், "கமலா! ஆத்திரப்பட்டாலும் உனக்கு அம்பிகையின் தரிசனம் கிடைத்தது! நான் தான் பாவி" என்றார்.

"பக்தா! நீ பாவியில்லை! நாளை முதல் அதிதியாக உன்னோடு அமர்ந்து சாப்பிடுவேன்! பயப்படாதே! உணவுக்கான சாமான்களையும் கொண்டு வருகிறேன்" என்றருளினார்.

தினமும் அதே போல் நடந்தது. கமலாவும் கணவனே தெய்வமென வாழ்ந்தாள்.

ஒலிம்பிக்





2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்க தலை நகர் ஏதென்ஸில் ஆகஸ்ட் 13 முதல் 29ந் தேதி வரை நடைபெற உள்ளன. ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளும் அதிகம்; வீரர்களும் அதிகம். விளையாட்டில் ஒருவருக்கு வெற்றி, இன்னொருவருக்குத் தோல்வி வரும். ஒலிம்பிக்கைப் பொறுத்தவரை 'விளையாட்டுக் களத்தில் எப்படி போராடுகிறோம்?' என்பதுதான் முக்கியம்.

இங்கு 21 கேள்விகள் உள்ளன. இவற்றுக்கான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள்.

முதல் பரிசு : **தங்கப் பதக்கம்**

இரண்டாம் பரிசு : **வெள்ளிப் பதக்கம்**

மூன்றாம் பரிசு : **வெண்கலப் பதக்கம்**

அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான விடையளித்து, சிறப்பான ஸ்லோகன் எழுதுபவர்களில் இருந்து பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கடைசித் தேதி : 12.8.2004.

விடை என்ன?

1. நவீன ஒலிம்பிக் போட்டியின் தந்தை________

2. ஒலிம்பிக் கொடி __________ ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

3. 1928ஆம் ஆண்டு ஒலிம்பிக் ஜோதி ________ஒலிம்பிக் போட்டியில் ஏற்றப்பட்டது.


4. 1928ஆம் ஆண்டு இந்திய ஹாக்கி அணி ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது. அதன் கேப்டன்________

5. சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்காவின் மரியான் ஜோன்ஸ் ________ தங்கப் பதக்கங்கள் பெற்றார்.

எது சரி?

6. மாரத்தான் போட்டியின் தூரம்?
அ.5.5 மீட்டர் ஆ. 42.195 மீட்டர்
இ. 25.71 மீட்டர்







க்விஸ்

போட்டியில் கலந்து கொள்ளுங்கள்! பதக்கங்களை வெல்லுங்கள்!





7. இந்திய ஒலிம்பிக் அசோஷியேஷன் துவக்கப்பட்ட ஆண்டு?

அ. 1927 ஆ.1932 இ. 1953

8. எந்த நவீன ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் சேர்க்கப்பட்டனர்?

அ.1908-லண்டன் ஆ.1900 - பாரீஸ்
இ. 1936-பெர்லின்

9. அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்குப் பதக்கம் வாங்கித் தந்த டென்னிஸ் வீரர்?

அ. ரமேஷ்கிருஷ்ணன் ஆ. விஜய்அமிர்த ராஜ் இ. லியாண்டர்பயஸ்

10. 1916, 1940, 1944 ஆம் ஆண்டுகளில் என்ன காரணத்திற்காக ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை?

அ. வெள்ளம்
ஆ. உலகப் போர்கள்
இ. வறட்சி



பொருத்துக:

11. 1984 - சிட்னி
12. 1988 - சியோல்
13. 1992 - அட்லாண்டா
14. 1996 - லாஸ்ஏஞ்சல்ஸ்
15. 2000 - பார்சிலோனா

சரியா, தவறா?

16. ஒலிம்பிக் போட்டியை உருவாக்கியவர்கள் எகிப்தியர்கள் ____

17. ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை வழங்கப்படுகிறது ____

18. பழைய ஒலிம்பிக் போட்டிகளில் ஓட்டப் பந்தைய வீரர்கள் பாவாடை அணிந்து ஓடினர் ____

19. ஒலிம்பிக்கின் நோக்கங்களில் ஒன்று வலிமை ____

20. பழைய ஒலிம்பிக்கில் தொடர்புடைய கடவுள் ஏதென்னா ____


ஸ்லோகன்

21. ஒலிம்பிக்கில் இந்தியா தங்கம் வென்றால்...________________

எட்டு வார்த்தைக்குள் சிறப்பான ஸ்லோகன் எழுதி அனுப்புங்கள்.

ஆசிரியர்,
கோகுலம்,
கல்கி பில்டிங்கஸ்,
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

உபயோகமான கவர் ஸ்டோரி!





கடிதங்கள்

'**அ**டுத்தது என்ன?' - கவர் ஸ்டோரி பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. வரலாற்று விந்தைகளில் முழங்கை அளவு வியப்பூட்டியது. விஷ்ணு சரணுக்கு என் வாழ்த்துகள். புத்திசாலித்தனமும், நிதானமும் கொண்ட செயல்பாடுகளால் எந்தப் பிரச்னையையும் சமாளிக்கலாம் என்பதை உணர்த்தியது யானை முட்டை படக்கதை.

- சே. நம்பிகிருஷ்ணன்,
பத்தாம் வகுப்பு,
டி.வி.எஸ். அரசு மேல்நிலைப்பள்ளி,
திருக்குறுங்குடி

'**இ**ன்று என்ன செய்தீர்கள்?' விளையாட்டு சுவாரசியமாக இருந்தது. பென்சிலை வைத்து எழுதினால், அழித்து விட்டு அடுத்த நாளும் பயன்படுத்தலாம். எப்படி என் ஐடியா? நீங்களும் இப்படி செய்யலாமே ஃப்ரெண்ட்ஸ்.

- வே. அபிராமி,
எட்டாம் வகுப்பு,
அ.பெ.மே.நிலைப்பள்ளி, சேலம்

மயில் செய்த பட்டம் கதையை நான் மிகவும் ரசித்துப் படித்தேன். படங்களும் நன்றாக இருந்தன. இவ்வளவு கஷ்டப்பட்டும் மயிலுக்குப் பட்டம் நிரந்தரமாகக் கிடைக்கலையே என்ற வருத்தம் கொஞ்சம் இருந்தது.

- என். பார்கவி,
பொழிச்சலூர்

'**பு**தையல் தீவு' தொடர்கதையைப் படிக்கும்போது நானே கதை நடக்கும் இடத்துக்குச் சென்று விட்டு திரும்பிய உணர்வு ஏற்படுகிறது.

- ஆர். அபிஷேக்,
பத்தாம் வகுப்பு,
பாளையங்கோட்டை

ஓவியப் போட்டி


முதுகில் வீட்டைச் சுமந்து செல்லும் ஆமைகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு ஆமை. உங்கள் கற்பனைக்கேற்றவாறு படத்தை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 6.8.2004

'**எ**ன் ஆசிரியர்' பகுதியில் நண்பர்கள் சொல்லியிருந்த ஒவ்வொரு அனுபவமும் மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தன.

- எஸ்.கே. நிர்மலா,
மதுக்கூர்

பாம்பு பழி வாங்குமா? என்ற கேள்விக்கு அருமையான பதில் அளித்த ஐக்குவுக்கு என் நன்றி. நெட் பிட்ஸ் பகுதியில் சிரித்த நாயைப் பார்த்து அசந்து விட்டேன்! பத்து வித்தியாசங்கள் சூப்பர்.

- சாய் கணேஷ்,
ஒன்பதாம் வகுப்பு, அ.ஆ.மே.நி. பள்ளி,
புதுக்கோட்டை



சேமிப்பு அவசியமா?

விவாத மேடை

மதிய உணவு இடைவேளை. ப்ரியாவும் விவேக்கும் நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். திடீரென அடுத்த வாரம் செல்ல இருந்த சுற்றுலா பற்றி பேச்சு வந்தது.

"விவேக் உங்கிட்ட இருக்கிற காமிராவை எடுத்துட்டு வா" என்றாள் ப்ரியா.

"ஃபிலிம் ரோலுக்கும் சேர்த்து அப்பா கிட்ட பணம் கேட்டிருக்கேன். ஒண்ணும் பிரச்னையில்லை."

"விவேக், நாங்க எல்லோரும் டூருக்கான பணத்தைக் கட்டிட்டோம். நீதான் பாக்கி. நாளைக்காவது மறக்காமல் வாங்கிட்டு வாடா" என்றான் பிரகாஷ்.

அன்று மாலை விவேக் வீட்டுக்கு ப்ரியா வந்தாள்.

"விவேக், உனக்கு ஞாபகப் படுத்தவே வந்தேன். இன்னிக்கே உங்க அப்பாகிட்ட பணத்தை வாங்கி வச்சிடு. கூட்டம் அதிகமா இருக்கிறதாலே நாளைக்குள்ளே பணம் கொடுக்கறவங்களை மட்டும் தான் அழைச்சிட்டுப் போவாங்களாம்."


"ஐயோ! எங்கப்பா திடீர்னு வேலை விஷயமா ஊருக்குப் போயிட்டாராம். எங்கம்மா பணம் வாங்க மறந்துட்டாங்க. அப்பா வர்றதுக்கு நாலு நாள் ஆகும். என்ன பண்றதுன்னு தெரியலை ப்ரியா. அம்மாகிட்டேயும் வீட்டுச் செலவுக்குத் தான் பணம் இருக்கு..." என்று வருத்தத்துடன் சொன்னான் விவேக்.

"உங்கிட்ட ஏதாவது சேவிங்ஸ் இருக்கா விவேக்?"

"இல்லையே ப்ரியா!"

"என்னைவிட உனக்குத்தான் பாக்கெட் மணி நிறையத் தர்றாங்க. அத்தனை பணத்தையும் செலவு பண்ணிடறே. கொஞ்சமாவது சேர்த்து வைத்தால் இந்த மாதிரி நேரத்துக்குப் பயன்படுமே. சரி, நான் சேர்த்து வைத்த பணம் கொஞ்சம் இருக்கு. மீதியை அப்பாவிடம் கேட்டு வாங்கி, நாளைக்குக் கட்டிடறேன். நீ கவலைப் படாதே" என்றாள் ப்ரியா.

"ப்ரியா இப்ப தான் சேமிப்போட



அவசியம் எனக்குப் புரியுது. சின்னப் பசங்க சேமிக்க வேண்டிய அவசியம் இல்லைன்னு தப்பா நினைச்சிட்டிருந்தேன். ரொம்ப தேங்ஸ் ப்ரியா" - விவேக்.

"நண்பர்களுக்குள்ளே தேங்ஸ் எல்லாம் எதுக்கு? நீ சேமிப்பின் அவசியத்தைப் புரிந்ததே போதும்" என்றபடி ப்ரியா வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

— தம்பிப்பயல்

மாணவர்களுக்கும் சேமிப்பு அவசியம்தானா? உங்கள் கருத்து என்ன? எழுதி அனுப்புங்கள்.


கிளித் தலை இளவரசி!

6 கதை: குறும்பலாப்பேரிப் பாண்டியன் படம்: லலிதா




வீரனே உன்னுடன் சண்டையிட நான் வரவில்லை.
நீராவது என்னைப் புரிந்து கொண்டீரே!
எங்கள் அரசர் உன்னை அழைத்துவரச் சொல்லி யிருக்கிறார்.
ம்... போகலாம்.
செங்கோடன் கோபத்துடன் அமர்ந்திருந் தான்.
மந்திரம் உட்பட சகல கலைகளிலும் சிறந்து விளங்கும் வீரனே எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?
ஏழிசை வல்லவராகிய செங்கோடனுக்கு என் வணக்கம். தங்களுடன் சண்டையிட நான் வரவில்லை.
பிறகு?


தங்கள் இசைத் திறனில் போட்டியிடவே வந்துள்ளேன்.
இசையிலா? அது உன்னால் முடியாது.
உலகிலேயே மிகவும் அற்புதமான மரகத வீணை என்னிடம் உள்ளது.
அதைவிட அற்புதமான மந்திர யாழ் என்னிடம் உண்டு.
போட்டியில் நீங்கள் வென்றால் மரகத வீணை உங்களுக்கு.
நான் தோற்றால் மந்திர யாழ் உனக்கு.
...அதுமட்டுமின்றி நீ தோற்றால் மரகத வீணையுடன் நீயும் எனக்கு அடிமையாகி விட வேண்டும்.


செங்கோடனுடன் இசைவேந்தன் இசை மண்டபத்துக்குள் நுழைந்தான்.
ஆஹா! உலகில் உள்ள அனைத்து இசைக் கருவிகளும் இருக்கின்றனவே!
என்ன திகைத்து நின்று விட்டாய்? பயமாக இருக்கிறதா?
பயம் ஒன்றும் இல்லை.
சரி, போட்டி ஆரம்பிக்கலாம்.
இசைவேந்தன் மந்திர சக்தியால் மரகத வீணையை வரவழைத்தான். செங்கோடன் மந்திர யாழுடன் அமர்ந்தான்.
போட்டி ஆரம்பித்தது.
(தொடரும்)



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி

இந்த மாதப் போட்டிக்குத் தயாரா? கேள்விகளுக்கு பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள். பரிசுகளை வெல்லுங்கள்!

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

* கீழே உள்ள கேள்விகளுக்குச் சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும்.
* பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
* முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.



மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: 20.08.2004

மாலத் தீவுகள்



ஆசிரியர்,
கோகுலம்
47-NP,
ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097

1. தலைநகரம் ....
2. மொழி ....
3. கரன்ஸி ......
4. மாலத் தீவுகளின் எண்ணிக்கை ......
5. முக்கியத் தொழில் ....
6. இது எந்த நாட்டுக் கொடி?



கொக்கரக்கோ...கோ!

கதை : டி. அய்யாசாமி, தர்மபுரி
படம்: பிள்ளை



உள்ளங்கையில்

நினைவில் நின்றவை...



ஒரு மாற்றம். "டேய்! நான் திட்டினாலும் நீ திட்டவில்லையே" என்று கூறி ஒரு சாக்லேட் வாங்கிக் கொடுத்தான். அன்றிலிருந்து இருவரும் நண்பர்களாயினர். ஆக எப் படிப்பட்ட மனிதர்களையும் அன்பு மாற்றிவிடும் என்பது நிஜம்தானே!

- எஸ். டேனியல் லியோ பிரபு
எட்டாம் வகுப்பு,
மதுரை

அன்பால் சாதிக்கலாம்!

என் அண்ணன் ராஜா அப்பொழுது ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். உடன் படித்த ராஜாவின் வகுப்பு மாணவன் ஒருவன் அண்ணாவிடம் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தான். என் அண்ணன் பரம சாது. யாரிடமும் சண்டை போட மாட்டான். நல்ல பையன் என்று அனை வரிடமும் பெயர் வாங்குவான். (என்னிடம் மட்டும் அவ்வப்பொழுது சண்டையிடுவான். அதுவேறு விஷயம்)

தினமும் அந்தப் பையனின் தொல்லை அதிகமானதால் ராஜா பள்ளி செல்லவே பயந் தான். அம்மாவிடம் அந்தப் பையன் 'போண்டா வாயன் என்றும், ராஜா கூஜா' என்று திட்டு வதாகவும் இன்னும் பல பட்ட பெயர்கள் வைத்து அழைப்பதாகவும் சொல்லிக் கொண்டி யிருந்தான். ஒருநாள் என் அம்மா ராஜாவிடம், "அவன் உன்னைத் திட்டும் போதெல்லாம் பதிலுக்குத் திட்டாமல் நன்றி என்றும், நீ அழ காக தமிழ் பேசுகிறாய், நீ கோபமாய் திட்டு வதில் கூட அழகு. நீ திறமைசாலி, உன் பெற் றோர்கள் நல்லவர்கள், நீ நாளடைவில் என்னைத் திட்டுவதை விட்டு விடுவாய் என்று சொல்ல வேண்டும், தவறியும் திட்டக் கூடாது" என்று கூறினார்.

ராஜா அம்மாவுக்கு அதிகம் கீழ்படிபவன் ஆதலால், அம்மா சொன்னபடியே அந்தப் பையனிடம் தினமும் சொல்லத் தொடங்கி னான். இரண்டு நாட்களில் அந்தப் பையனிடம்

சுண்டெலி

மும்பையிலிருந்து தன் இரு குழந்தை களுடன் என் அக்கா வந்திருந்தார். குழந்தை களின் சரளமான மழலை ஆங்கிலப் பேச்சு எங்களை மிகவும் அசத்தின.

ஒரு நாள் சுண்டெலி ஒன்று எங்கள் கண் களில் பட, பயந்து போன குட்டீஸ் நாற்காலி களில் ஏறிக் கொண்டு, ஆ... ஊ... என்று குதித்தனர். என் அப்பா சுண்டெலியை அடிக்க, கம்பை எடுத்து ஓட ஓட விரட்டிப் பார்த்தும், மாட்டாமல் டிமிக்கி கொடுத்து ஓடியது சுண்டெலி. அதைப் பார்த்த ஜானி, "மம்மி மம்மி... இது டாம் அன்ட் ஜெர்ரியில் வரும் மவுஸ் மம்மி... அதான் புடிக்க முடியலை" என்று கத்தவே, நாங்கள் சிரித்த சிரிப்பில் எங்கள் வீடே குலுங்கியது.

- வி.அஜய் ராஜா,
இராமநாதபுரம்



ஈ-ராக்!



நாளை செய்கிறேன்...

என் தம்பி எந்தச் செயலையும் "நாளை செய்கிறேன், நாளை செய்கிறேன்" என்று தள்ளிப் போடுவான். காலந்தாழ்த்தும் இக் குணத்தை மாற்ற நினைத்த என் அப்பா, அவன் பிறந்த நாளன்று 'நாளை ஒரு போதும் வருவதில்லை' என்பதைக் குறிக்கும் 'Tomorrow Never Comes' என்ற ஆங்கிலப் பழமொழி எழுதப்பட்ட ஓர் அழகிய இயற்கைக் காட்சிப் படமொன்றை வாங்கி வந்தார். "குமரா, இப்படத்தை நீ படிக்கும் அறையில் மாட்டி வை. உனக்கு இன்று நாங்கள் அளிக்கும் பரிசு



இதுதான்" என்றார். என் தம்பியோ, "படம் மிக அழகாயிருக்கிறது! கட்டாயம் நாளை மாட்டிவிடுகிறேன் அப்பா" என்றானே பார்க்கலாம்! நாங்கள் மயக்கம் போடாத குறைதான்!

- ஆர்.ஜோதி,
மதுரை

என் கையில்...


எங்கள் ஊரின் மேற்கே உள்ள அய்யனார் கோவிலுக்கு குடும்பத்துடன் சாமி கும்பிடச் சென்றோம். மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ள ஆற்றங்கரையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். கூழாங்கற்களில் நாங்கள் சாப்பிட்ட சாதம் கொஞ்சம் சிந்தியதால் அதில் ஈக்கள் மொய்க்க ஆரம்பித்தன. அதைக் கவனித்த என் தங்கை அதில் ஒரு கூழாங் கல்லை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்ட போது மீண்டும் அதில் ஈக்கள் மொய்க்க ஆரம்பித்தன. அவள் எல்லோரிடமும், "நான் இப்போது ஜார்ஜ் புஷ் ஆகி விட்டேன்" என்றாள். "எப்படி?" என்று கேட்டோம். அதற்கு அவள், "ஈ 'ராக்' என் கையில் இருக்கிறதல்லவா?" என்று சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்

ஆதி... பாதி....

என் வகுப்பில் ஆதிநாராயணன் என்று ஒரு மாணவன் இருந்தான். ஒரு சமயம் அவனுக்கு டைபாய்டு ஜுரம் வந்து மூன்று வாரங்கள் பள்ளிக்கு வரவில்லை. மூன்று வாரங்கள் கழித்து அவன் பள்ளிக்கு வந்த போது உருவத்தில் மிகவும் மெலிந்து காணப் பட்டான். என் ஆசிரியர் அவனைப் பார்த்து, "என்னடா ஆதி நாராயணா, இப்படி பாதி நாராயணன் ஆயிட்டே?" எனக் கூற அனைவரும் சிரித்தோம்.

- பா. சூர்யா,
மடிப்பாக்கம், சென்னை





பாதைகள்

மாலை பள்ளிக் கூடம் விட்டு வீடு திரும்பினான், கண்ணன்.

அவனது சட்டை கசங்கி இருந்தது. முகம் வீங்கி இருந்தது.

"என்ன நடந்தது?" என்று கேட்டார் தாத்தா.

"நான் வந்து கொண்டிருந்தப்போ... எதிரில் அதே பாதையில் அடுத்தத் தெரு பாலுவும் வந்து கொண்டிருந்தான். இடித்து விட்டது. அவன் அடித்தான். நானும் அடித்தேன்" என்ற கண்ணனின் குரலில் இன்னமும் கோபம் இருந்தது.

நடந்தவற்றை உணர்ந்து கொண்ட தாத்தா, "நீ உள்ளே போய் காபி குடித்து விட்டு வா. சற்று தூரம் நடந்து வரலாம்" என்றார்.

கண்ணன் முகத்தைக் கழுவி விட்டு வந்தபோது அம்மா, குவளையை நீட்டினார்.

தாத்தாவும், கண்ணனும் வீட்டை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கினர்.

அவர்கள் அந்தக் குறுகிய சாலையை அடைந்தபோது - சாலையில் ஒருவர் போய்க் கொண்டிருந்தார்.

"கண்ணா! சற்று நில்" என்ற தாத்தா, "அந்த ஆளைப் பார்த்தால் எப்படிப்பட்டவராகத் தோன்றுகிறது?" என்று கேட்டார்.

கண்ணன் பார்த்தான். "முகத்தைப் பார்த்தால்... முரடனாகத் தோன்றுகிறது."

அப்போது அந்த ஆள் போய்க் கொண்டிருந்த பாதையிலேயே எதிர் திசையிலிருந்து மற்றொருவர் வந்து கொண்டிருந்தார்.

"அவரையும் பார்" என்றார், தாத்தா.

அந்த முரட்டு மீசைக்காரரைப் பார்த்த கண்ணன், "அவரும் இவரைப் போல முரடனாகத்தான் இருப்பார்" என்றான்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இங்கிருந்து போய்க் கொண்டிருந்தவர் எதிரில் ஆள் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தும் தான் விலகாமல் 'அவர் விலகிப் போகட்டுமே' என்று இறுமாப்புடன், தன் பாதையிலேயே போய்க் கொண்டிருந்தார். எதிரில் வந்தவரோ... 'அவருக்காக நாம் விலகக் கூடாது' என்ற எண்ணத்தில் வந்து கொண்டிருந்தார். இருவரும் நெருங்கிக் கடக்கும்போது ஒருவர் மீது ஒருவர் உரசிக் கொள்ள இருவருமே திரும்பி ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்து விட்டு நடந்தனர்.

அதைப் பார்த்த கண்ணன் சிரித்தான்.

"அந்த முரடர்கள் ஒருவருக்கொருவர் வழிவிட்டு விலகவில்லை. முரடனுக்கும் முரடனுக்கும் ஒரே பாதை" என்றார் தாத்தா.

"அதோ... அவரைப் பார்த்தால் சாதுவாகத் தோன்றுகிறது" - சாலையில் வந்து கொண்டிருந்தவரைச் சுட்டிக்



எத்தனை?

☺ புலேந்திரன் ☺

காண்பித்தான், கண்ணன்.

"ஆம். ஆனால், எதிரில் வருவது முரடன். நடப்பதைக் கவனி!" என்றார் தாத்தா.

அதே பாதையில் எதிரில் ஆள் வருவதைப் பார்த்த சாது, தன் பாதையிலிருந்து சற்று விலகி நடந்தார். எதிரில் வந்தவர், தான் வந்த பாதையிலேயே வந்து கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த கண்ணன், "சாதுவானவர் அடுத்தப் பாதையில் போகிறார். அந்த ஆள் மட்டும் திமிராக அதே பாதையிலேயே போய்க் கொண்டிருக்கிறாரே..." என்றான்.

அதற்கு தாத்தா, "ஒருவர் சாது. மற்றவர் முரடர். ஆகவே, சாதுவுக்கும் முரடனுக்கும் இரண்டு பாதைகள்!" என்றார்.

அவர்கள் சற்று தூரம் நடந்த போது -

இங்கிருந்து போய்க் கொண்டிருந்த சாதுவின் பாதையிலேயே எதிர் திசையிலிருந்து ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

தாத்தாவும், கண்ணனும் நடக்கப் போவதை கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

இங்கிருந்து போனவர் எதிரில் வருபவரைப் பார்த்ததும் தன் பாதையிலிருந்து இடப்பக்கம் விலகி, அடுத்தப் பாதையில் நடந்தார். அங்கிருந்து வந்தவரும் இவரைப் பார்த்ததும் தன் பாதையிலிருந்து சற்று இடப்பக்கமாக விலகி நடந்தார்.

அதைப் பார்த்த கண்ணன், "அவர்கள் நடந்த பாதை ஒன்று. அவரவரும் விலகி நடந்ததால் உண்டான பாதைகள் இரண்டு. ஆகவே, இப்போது மூன்று பாதைகள்" என்றான்.


"ஆம். சாதுவுக்கும், சாதுவுக்கும் மூன்று பாதைகள்" என்ற தாத்தா, "நீ எதை விரும்புகிறாய்?" என்று கேட்டார்.


"தாத்தா! நான் இதுவரையிலும் முரடனாக இருந்துள்ளதை உணர்ந்துவிட்டேன். இனிமேல் நான் செல்லும் போது மூன்று பாதைகள் இல்லாவிட்டாலும் நிச்சயமாக இரண்டு பாதைகள் இருக்கும்" என்றான், கண்ணன்.

தாத்தா மகிழ்ச்சியுடன் கண்ணனின் தலையை வருடிக் கொடுத்தார்.



படத்தை நிறைவு செய்யுங்கள்!





வண்ணம் தீட்டுங்கள்!

இறைவன் செய்த ரொட்டி!

பிரபலங்களின் வாழ்வில்...


சாதிக்க முடியும்!

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய், மருத்துவரிடம், "தன் குழந்தையைப் பார்க்க வேண்டும்" என்று கேட்டார். மருத்துவரோ, "உங்களுக்கு ஓர் அதிர்ச்சியான செய்தி சொல்லப் போகிறேன். மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார்.

அதைக் கேட்ட தாய், பதைபதைத்து அழுகையுடன், "என் குழந்தை இறந்து போய் விட்டதா?" என்று கேட்டார். "குழந்தை இறக்கவில்லை. ஆனால் இறந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். காரணம், குழந்தை பார்வையற்று, செவி கேட்கும் தன்மையற்று பிறந்திருக்கிறது. அதுவும் பெண் குழந்தை" என்றார் மருத்துவர்.

"குருடாய், செவிடாய் பிறந்த பெண் குழந்தை எப்படி வாழப் போகிறதோ?" என்று கண்ணீர் விட்டபடியே அக்குழந்தையை வளர்த்தார் தாய். அப்பெண் குழந்தை ஒரு சரித்திரம் படைத்தது. நுகரும் திறனாலும், தொடும் உணர்வாலும், கடின உழைப்பாலும், பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டு, எண்ணற்ற புத்தகங்களை எழுதி, 'முயற்சி செய்தால், என்ன குறை இருந்தாலும், எதையும் சாதிக்க முடியும்' என்பதை உலகிற்கு உணர்த்தியது. அப்பெண் குழந்தை தான் 'ஹெலன் கெல்லர்!'

- எம். வினோத்,
சங்கரன்கோவில்



• காமராஜர்

ஒற்றுமை

கபீர்தாசர் இந்து, முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர். ஆனால் அவரை கடுமையாக இந்துக்களும் திட்டினார்கள். முஸ்லிம்களும் திட்டினார்கள். ஆனால் கபீர்தாசரோ சிரித்துக் கொண்டிருந்தார். "இந்துக்களும், முஸ்லிம்களும் உங்களைத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்களோ சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே, எப்படி?" என்று அவரிடம் சிலர் கேட்டனர்.



• ராதாகிருஷ்ணன்

அதற்கு கபீர்தாசர் சொன்னார், "என்னைத் திட்டுவதிலாவது அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்களே! அதனால்தான்!"என்றார்.

- ஆர். பிரசன்னா,
காந்திகிராமம்,
கரூர்

ஏன் நிறுத்திவிட்டாய்?

ஜாக்கி வர்னான், நடிகர் சார்லி சாப்ளினின் ரசிகர். அவர் சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே, தொடர்ந்து சாப்ளினுக்கு



• ஹெலன் கெல்லர்

கடிதங்கள் எழுதிவந்தார். ஆனால் அவர் எழுதிய எந்தக் கடிதத்திற்கும் சாப்ளின் பதில் எழுதியதில்லை. வளர்ந்து பெரியவனான ஜாக்கி வர்னான் திரைப்படத் துறையில் நுழைந்து, சிறந்த நகைச்சுவை நடிகர் என்ற பெயரும் பெற்றார். ஒரு நாள் உணவு விடுதியில் சாப்ளினைக் கண்ட வர்னான், அருகில் சென்று, "ஐயா, என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் உங்கள் ரசிகன், என்னுடைய பெயர் ஜாக்கிவர்னான்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரைச் சற்று நேரம் உற்று நோக்கிய சாப்ளின்,"சொல்...ஏன் எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டாய்?" என்றார்.

- அ.பேச்சியப்பன்,
ராஜபாளையம்

கடமையை உணர்த்தியவர்!

பெருந்தலைவர் காமராசர் நீண்ட தூரச் சுற்றுப் பயணம் முடித்து காரில் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். அதிகாலை நேரம். பயணக் களைப்பால் கண்ணயர்ந்திருந்த அவர், நீண்ட நேரம் கார் ஒரிடத்திலேயே நிற்பதை உணர்ந்தார். திடுக்கிட்டு விழித்தார்.

"என்னப்பா ஆச்சு? எங்கே வந்திருக்கோம்? ஏன் நிக்கிற?" என்று டிரைவரிடம் கேட்டார்.

"சைதாப்பேட்டை பாலங்கிட்ட வந்தாச்சு! ஏதோ ஆக்ஸிடெண்ட் போலிருக்கு! ட்ராஃபிக் ஜாம் ஆயிருக்கு" என்றார் காரோட்டி.

காமராசர் காரின் கதவைத் திறந்தார். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு விறுவிறுவென சைதாப்பேட்டை காவல் நிலையத்திற்குச் சென்றார்.

அப்போது அங்கு பணியில் இருந்த மூன்று காவலர்கள் தங்கள் முன்னால் முதலமைச்சர் வந்து நிற்பதைக் கண்டு பதறி எழுந்தார்கள்.

"இங்க உட்கார்ந்து என்ன பண்றீங்க? ரோடு பூரா வண்டிங்க நிற்குது. வாங்கய்யா வெளியே" என்றார் காமராசர்.

போக்குவரத்தை சீர் செய்ய போலீசாருடன் சேர்ந்து வேலை செய்தார். அங்கு அவரைப் பார்த்த பயணிகளும் ஆச்சரியம் அடைந்தனர். அரை மணி நேரத்தில் சாலை சரியானது.

- சு. கண்ணகி,
மிட்டூர்



• சாப்ளின்

ஆணவத்துக்குக் கிடைத்த அடி!

பாராட்டு விழா ஒன்றின் போது ஓர் ஆங்கிலேயர் கூறினார்: "இறைவன் ஆங்கிலேயர்களாகிய எங்கள் மீது அதிக அன்பு கொண்டவர். மிகவும் முயற்சி செய்து அதிக விருப்பத்தோடு எங்களைப் படைத்தார். எனவேதான் நாங்கள் இவ்வளவு வெண்மையாக இருக்கிறோம்!" என்றார். அங்கு டாக்டர் ராதாகிருஷ்ணனும் இருந்தார். அந்த ஆங்கிலேயரின் ஆணவப் பேச்சைக் கேட்டு புன்முறுவலுடன் கூடியிருந்தவர்களுக்கும் கூறினார்:

"நண்பர்களே! ஒரு முறை இறைவன் ரொட்டி தயாரிக்க விருப்பம் கொண்டார். அவர் ரொட்டி தயாரிக்க உட்கார்ந்தவுடன், முதல் ரொட்டி சிறிது வேகவில்லை. அதன் காரணமாக ஆங்கிலேயர்கள் பிறந்தனர். இரண்டாவது ரொட்டி அதிக நேரம் வெந்தது! அதன் மூலம் நீக்ரோக்கள் பிறந்தனர். இவ்வாறு இரண்டு முறை செய்த பயிற்சியின் மூலம் அனுபவம் பெற்ற இறைவன் மூன்றாவது ரொட்டியைச் சரியான பக்குவத்தில் தயாரித்தார். அது அரை வேக்காடாகவும் இல்லை, கருத்தும் போகவில்லை! அதன் காரணமாக இந்தியர்களாகிய நாங்கள் பிறந்தோம்!" என்றார். இந்தப் பதிலைக் கேட்ட அந்த ஆங்கிலேயர் மிகவும் வெட்கித் தலைகுனிந்தார்.

- ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார் பாளையம், ஈரோடு

திண்டுக்கல் ஜெய் குருதேவ் மகரிஷி பள்ளி ஸ்பெஷல்

முதல் அறிவியல் பூங்கா!



திண்டுக்கல் டவுனிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள சீலப்பாடி பஞ்சாயத்தில் இருக்கிறது ஜெய் குருதேவ் மகரிஷி பள்ளி. இயற்கை அழகுடன் சுமார் ஆறரை ஏக்கர் நிலப்பரப்பில், கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கிறது இப்பள்ளி. முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை இங்கு வகுப்புகள் அமைக்கப் பட்டுள்ளன. மழலை வகுப்புகள் நேருஜி நகர், முனிசிபல் காலனியில் சிறப்பாய் இயங்கி வருகிறது.

1994ம் வருடம், 75 மாணவர்களை மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி, இன்றோ 1600 மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு அஸ்திவாரத்தைப் பலமாய் போட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு சுமார் 75 ஆசிரியர்கள் கல்விச் சேவை புரிகின்றனர்.

இன்று பதினோராம் ஆண்டில் பலமாய் காலூன்றியுள்ள இப்பள்ளி, 'கல்வி என்பது ஒரு சுமையாக இல்லாமல், சுகமானதாய்' இருக்கும் வண்ணம் மாணவ, மாணவியருக்கு'மத்திய அரசு பாடத்திட்டத்தின் கீழ் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு, கனிவான முறையில் கல்வி கற்றுத்தர வழிவகை செய்துள்ளது. கணினி மற்றும் அறிவியல் ஆய்வகச் சாலை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது.

நூல் நிலையத்தில் 10,000 புத்தகங்களுக்கு மேல் உள்ளன.

மாணவ, மாணவியரின் உடல் நலம் மற்றும் மனநல மேம்பாட்டிற்காக உடற்கல்வி ஆசிரியர்கள் மூலம் தியானம், யோகா போன்றவை கற்றுத் தரப்படுகிறது.

அப்துல்கலாமின், ஆசைக் கனவுகளை இனிதே நிறைவேற்றும் வகையில் எளிய விளையாட்டுகள் மூலம் உயர்வான அறிவியல் கலைகளை ஊக்கத்துடன் மாணவர்கள் கற்றுத் தேர்ந்திட இங்கு நிரந்தர அறி(வியல்)வுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இது 9 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள பள்ளிகளிலேயே பெரிய அறிவியல் பூங்கா இதுவே. தற்போதைக்கு இதில் 74 செயல்முறை உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் இது விரிவு படுத்தப்பட உள்ளது.


வாரத்தின் இரண்டு நாட்களில் ஜிம்னாஸ்டிக், நீச்சல், கராத்தே, குதிரையேற்றம், கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், ஸ்கேட்டிங், தேவாரம் போன்றவற்றிற்காக சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

போக்குவரத்து வசதிக்காக 7 பேருந்துகளும் இயங்குகின்றன.

கர்வமில்லாத ரோஜா!

மண்ணை நேசிக்கும் நான்
என்னைக் கிள்ளிப்பறிக்கும்
மனிதனையும் நேசிக்கின்றேன்
தேசிய மலரல்ல நான்
ஆனால், இந்தத் தேசம் விரும்பும் மலர்
மல்லிகைபோல் மணம் இல்லை
எனினும் என் கம்பீரம்
குறைவதில்லை
என்னில் கர்வம் இல்லை
பின்னால்
அழிவிருப்பதால்..

- ம.ஜெயஸ்ரீ



கடி ஜோக்ஸ்

"காலண்டர்'னு ஏன் பேரு வந்துச்சு?"
"காலம் முடிந்ததும் 'டர்'என்று கிழிப்பதால்!"

" 'மே'ல போடுற கல் கீழே வரக் காரணம் என்ன?"
" 'மே'ல மட்டுமில்லை, 'ஜுன்'ல போட்டாக் கூட கல் கீழே தான் வரும்."

- எச். விஜயராஜ்,
ஐந்தாம்
வகுப்பு



கடி க்விஸ்

1. கோழி ஏன் முட்டை போடுகிறது?
2. ஞாயிற்றுக் கிழமை வராத பால்?

- வர்ஷினி,
ஐந்தாம் வகுப்பு

விடை: 1. படிக்காததால் 2. தபால்

விடுகதைகள்

1. காற்றுக்குப் பறப்பான்; வெயிலுக்கு வெடிப்பான் - அவன் யார்?
2. சருகு சேலைக்காரி சன்டை போடாமலே கண்ணீர் வரவழைப்பாள் - அவள் யார்?
3. அறைகள் ஆயிரம் அத்தனையும் ஒரே அறை - அது என்ன?

- பி. இசக்கிராஜன்,
ஐந்தாம் வகுப்பு

விடை: 1. பலூன் 2. வெங்காயம்
3. தேன்கூடு

1. பூக்கும் காய்க்கும், ஆனால் காக்கா உட்கார மட்டும் இங்கே இடமில்லை - அது என்ன?
2. கறுப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில் கண்ணீர்ப் பிரவாகம் - அது என்ன?
3. மூன்று கொண்டை போட்டவன் சமையலுக்கு உதவுவான் - அவன் யார்?
4. சின்னத் தம்பி, சிவப்புத் தம்பி, திறந்த வாய் மூடாத நல்ல தம்பி - அவன் யார்?

- பரிமல் குமார்

விடைகள்: 1. நெற்கதிர் 2. மேகம் - மழை
3. அடுப்பு 4. தபால் பெட்டி

உங்களுக்குத் தெரியுமா?

1. உலகத்தில் மிகப் பெரிய பாலூட்டி வகையைச் சேர்ந்த உயிரினம்?
2. கோஹினூர் வைரம் எங்குள்ளது?
3. காக்கைகளே இல்லாத நாடு எது?
4. கொசுக்களே இல்லாத நாடு எது?

- இரா.வருணா

விடை : 1. நீலத் திமிங்கிலம் 2. இங்கிலாந்து
3. சிங்கப்பூர் 4. ஃபிரான்ஸ்

"ஆப்பக் கடையில் இடி விழுந்தால் என்ன ஆகும்?
"இடியாப்பமாகும்."

"அவர் போட்டோகிராஃபரா?"
"எப்படி கண்டுபிடிச்சே?"
"டெவலப் பண்ணி பேசுறாரே!"

- ஆர். பவித்ரா,
ஏழாம் வகுப்பு

நோயாளி: வரவர மறதி ரொம்ப அதிகமாகுது டாக்டர். அதனால் தப்பு நடந்துடுது.

டாக்டர்: அப்படி என்ன செய்திடறீங்க?

நோயாளி: ராத்திரியெல்லாம் ஒரு நல்ல டாக்டர்கிட்ட போகணும்னு நினைக்கிறேன். பகலில் மறந்துட்டு உங்களிடம் வந்துடறேன் டாக்டர்!

- பரிமல்
ஐந்தாம் வகுப்பு



திண்டுக்கல் ஜெய் குருதேவ் மகரிஷி பள்ளி ஸ்பெஷல்

0	1	2	3	4	=	10
1	2	3	4	5	=	15
2	3	4	5	6	=	20
3	4	5	6	7	=	25
4	5	6	7	8	=	30

எல்லா எண்களையும் கூட்டினால் விடை உதாரணமாக

0 + 1 + 2 + 3 + 4 = 10 மற்றும் 1 + 2 + 3 + 4 + 5 = 15

10த்திற்கும் 15ந்திற்கும் இடையே 5 எண்கள் உள்ளன. அதுபோல் வலது புறமும், கீழ்ப்புறமும் வரும் எண்களை எழுதி, வலது புறம் எண்களைக் கூட்டினால் வரும் இந்த அபூர்வம். இது போய்க்கிட்டே இருக்கும்.

- மீ. சிவராமன்
ஒன்பதாம் வகுப்பு

'ஆ' நதி!

- ஜெர்மனி நாட்டில் ஓடும் ஒரு நதியின் பெயர் 'ஆ'.
- உலகிலேயே பெண் எழுத்தாளர்கள் அதிகமுள்ள நாடு ரஷ்யா தான்.
- காஷ்மீரில் பூக்கும் மலர்களில் 90 சதவீத மலர்களுக்கு மணம் கிடையாது.


- கோ. கீதாஞ்சலி,
எட்டாம் வகுப்பு

முயன்று முடிப்போம்!

அழகான மயிலைப் போல் மனிதர்கள்
தோகை விரித்தாட முடியாது!
ஆனால்,
தேனீக்களைப் போல் சேமித்து வாழ
மனிதர்களால் முடியும்.


காகங்களைப் போல் ஒற்றுமையைக் கடைபிடிக்க
மனிதர்களால் முடியும்
முடிந்தவற்றை எண்ணி முடிப்போம்!

- எம். ஜெயஸ்ரீ
ஏழாம் வகுப்பு





வி. ஐஸ்வர்யா



ஆர். அருண்,
நான்காம் வகுப்பு



ஆர். சசிகுமார்,
ஏழாம் வகுப்பு

ஜி. பாலாஜி,
ஐந்தாம் வகுப்பு



திண்டுக்கல் ஜெய் குருதேவ் மகரிஷி பள்ளி ஸ்பெஷல்



ஆர்.வைஷ்ணவி

வி. மதுபாலா,
ஐந்தாம் வகுப்பு



பி. ஸ்வாதி



ஷ். கஸ்மிதா,
ஐந்தாம் வகுப்பு



வி. அனுராகவி,
ஏழாம் வகுப்பு



ஸ்ரீ சாய் மீனாட்சி,
ஆறாம் வகுப்பு





வாகை சூட வயது தடையில்லை

அசத்தும் அப்ஸரா!




குத்துச் சண்டை போட்டியில் மாநில அளவில் வெள்ளிப் பதக்கம், வாள் சண்டை போட்டியில் மாநில அளவில் தங்கப் பதக்கம், கராத்தேவில் வெள்ளை பெல்ட். இது மட்டுமா? பற்களால் கயிற்றைக் கடித்தபடி, இணைக்கப்பட்டிருக்கும் ஆட்டோ, மினி வேன், ஐந்து மாருதி கார்கள், பஸ் ஆகியவற்றை இழுத்து அசத்துவது. முடிந்ததா சாதனை? பொறுங்கள். படிப்பில் முதல் ஐந்து மாணவியரில் ஒருவர், கம்ப்யூட்டர் கல்வியில் போட்டோ ஷாப், பேஜ் மேக்கர் வரை கற்றுத் தேர்ந்தது, படம் வரைவது, கீ போர்டு வாசிப்பது, ரங்கோலியில் திறமையைக் காட்டுவது, இப்படி சகல கலா வல்லியாக விளங்கும் அப்ஸராவைச் சந்திக்க வேண்டுமானால் சென்னையில் புறநகரான திருவொற்றியூர் கவிபாரதி வித்யாலயாவுக்குச் செல்ல வேண்டும். அங்கே தான் ஏழாவது படித்துக் கொண்டிருக்கிறார் அப்ஸரா.

'அப்ஸராவைப் பார்க்க வேண்டும்' என்று பள்ளி நிர்வாகியிடம் சொல்லி விட்டு காத்துக் கொண்டிருக்கும்போது, 'அவளால் பள்ளிக்கே பெருமை' என்று ஆசிரியர்கள் பேசிக் கொள்வதைக் கேட்க முடிந்தது. இத்தனை சாதனைகளையும் சாதித்ததை காட்டிக் கொள்ளாத அப்பாவி முகம், குறைவான பேச்சு!

"வாள் சண்டை, குத்துச் சண்டை போட்டியில் கலந்து கொள்கிறாயே, பயமா இல்லையா?" என்று கேட்டால், 'எதுக்காக பயப்படணும்?' என்று திருப்பிக் கேட்கிறார் அப்ஸரா. சமீபத்தில் மெரினாவில் ஐந்து மாருதி கார்களை ஒன்றாக இணைத்து, பல்லால் கிட்டத்தட்ட 60 மீட்டர் இழுத்ததைக் கண்டு கூடிய கூட்டம் ஆச்சரியப்பட்டு ஆரவாரம் செய்தது. "உனக்கு அந்தச் சமயம் மட்டும் பல்லில் எப்படி பலம் வந்து சேருகிறது?" என்று கேட்டால் பதில் சொல்லுமளவுக்கு

இன்னமும் பக்குவம் வராததால் முழிக்கிறார். அப்புறம் சுதாரித்துக் கொண்டு, ''வேறு எதுவும் நினைக்க மாட்டேன்; நான் இழுக்கும் வண்டி நகரணும் என்பதை மட்டும்தான் நினைப்பேன்'' என்கிறார். ''என்னுடைய பதினைந்தாவது வயதுக்குள் கின்னஸ் புத்தகத்தில் பல சாதனைகளுக்காக இடம் பிடிப்பதே என் லட்சியம்'' என்கிறார் அப்ஸரா. அவளை ஊக்கப்படுத்துபவர் அவளது மாமா தேவராஜன்.

அப்ஸராவின் அப்பா அருள், எண்ணூர், மணலி பகுதியில் காண்ட்ராக்டராக இருக்கிறார். தம்பி அமரேஷுக்கு தடகள ஆட்டத்தில் விருப்பம். தினசரி தண்டையார் பேட்டையில் தடகள பயிற்சிக்குச் செல்வார். கூடவே அப்ஸராவும். தம்பி தடகளத்தில் பயிற்சி பெறும்போது வெறுமனே பொழுது போக்கிக் கொண்டிருந்த அப்ரஸாவின் கண்களில் திடலின் ஒரு மூலையில் நடைபெற்று வந்த குத்துச் சண்டை பயிற்சி கவர்ந்தது. எம்.கே.எம். பாக்ஸிங் கிளப் சார்பாக அங்கே பயிற்சிகள் நடத்தப்பட்டு வந்தன. 'எனக்கும் கற்றுக் கொடுங்கள்' என்று அப்ஸரா நச்சரிக்கவே அவளை பாக்ஸிங் கிளப்பில் சேர்த்து விட்டார் மாமா தேவராஜன். அதுதான் துவக்கம். அப்புறம் வாள் சண்டை பயிற்சி, கராத்தே என்று தொடர போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளும் பதக்கங்களும் வாங்குவதில் பிஸியாகி விட்டார் அப்ஸரா.



''பஸ், மாருதி கார்களைப் பல்லால் இழுத்து சாதனை செய்யும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது?''

''குற்றாலீஸ்வரன் மிகச் சிறிய வயதில் நீச்சலில் சாதனை புரிந்ததை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது 'மாமா... நானும் இதுபோல் ஏதேனும் சாதனை செய்தே தீரணும்' என்றாள். அதன்பின் யோசித்து, ஆட்டோ இழுக்க பயிற்சி கொடுத்தோம். குத்துச் சண்டை வீரர்கள் கன்னத்தையும் பல் மற்றும் ஈறுகளையும் வலுப்படுத்த சில முக அசைவு பயிற்சிகளைச் செய்ய வேண்டும். தினசரி அப்ஸராவும் அப்படி செய்வதால் அவள் பற்களும், ஈறுகளும் உறுதியாகியிருக்கின்றன'' என்கிறார் தேவராஜன்.


குத்துச் சண்டையில் எதிராளி கன்னங்களில் அடித்தால் கூடுதல் பாயிண்ட் உண்டு. எனவே குத்துச் சண்டை வீரர் முக்கியமாக கன்னங்களைப் பாதுகாத்துக் கொள்வார். ''இந்த ஆட்டங்களில் ஏதாவது எசகுபிசகாக அடிபட்டால் அப்ஸராவின் எதிர்காலம் பாதிக்கப்படுமே?'' என்று அப்ஸராவின் மாமாவிடம் கேட்டோம்.

''நீங்கள் நினைப்பது போல் ரொம்ப ரிஸ்க் கிடையாது. தகுந்த பாதுகாப்புடன் தான் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். வாள் சண்டையில் எதிராளியின் வாள் நம் உடலில் இடுப்புக்கு மேல் முனையால் தொடுவதைத் தடுக்க வேண்டும். அது திறமையை மட்டுமே பிரதிபலிக்கும் ஆட்டம். மற்றபடி வாளால் எதிராளிக்கு எந்தக் காயமும் ஏற்பட வாய்ப்பில்லை'' என்றார் தேவராஜன்.

''எட்டு வருடத்துக்குள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு இந்தியாவின் பெருமையை, இந்த ஆட்டங்களில் உயர்த்தணும். இதுதான் என் லட்சியம்'' என்கிறார் அப்ஸரா. சாதனை படைப்பதற்கான சகல அம்சங்களும் பொருந்தி வருகிறது அப்ஸராவுக்கு.

— ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு



விளையாட்டு உலகம்

சாதித்தார் ஷரபோவா!



• ரோஜர் ஃபெடரர்



• ஷரபோவா

விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்துக்கான இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் - மரியா ஷரபோவா ஆகியோர் மோதினர். ஒரு மணி நேரம் 13 நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டியில் 6-1, 6-4 என்ற நேர் செட்களில் செரினாவை வென்று ஷரபோவா பட்டத்தை வென்றார்.

ஏற்கெனவே இருமுறை பட்டம் வென்றவரும், நடப்பு சாம்பியனுமான செரினா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

17 வயதில் சாதனை படைத்த ஷரபோவா விம்பிள்டன் பட்டம் வெல்லும் முதல் ரஷ்ய வீராங்கனை என்ற சிறப்பையும் பெற்றார். மார்ட்டினா ஹிங்கிஸ்க்குப் பிறகு இளம் வயதில் பட்டம் வென்றவர் ஷரபோவா. இவர் விளையாடிய முதல் கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. 40-41ஆம் பக்கங்களில் உங்களுக்காக ஷரபோவாவின் போஸ்டர்!

விம்பிள்டன் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியன் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர்ஃபெடரரும், அமெரிக்காவின் ஆண்டி ராடிக்கும் மோதினர். பரபரப்பான ஆட்டத்தின் இறுதியில் 7-6, 6-4 என்ற செட்கணக்கில் ஃபெடரர் வென்று, கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டார். இதன் மூலம் 5 கோடி ரூபாய் ஃபெடரருக்குப் பரிசாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு நடைபெற்ற மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இரண்டில் பட்டம் வென்றுள்ளார் ஃபெடரர்.

யூரோ 2004

போர்ச்சுகலில் ஜூன் மாதம் முதல் நடைபெற்று வந்த யூரோ 2004 கால்பந்து போட்டிகள் ஜூலை 6-ந் தேதி இறுதி கட்டத்தை எட்டியது.

இறுதிப் போட்டியில் இது வரை விளையாடாத போர்ச்சுகல் - கிரீஸ் அணிகள் மோதின. 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் போர்ச்சுகலை வென்று கிரீஸ் மகுடம் சூடிக் கொண்டது.

ஐரோப்பிய கண்டத்தில் எந்த ஒரு பெரிய போட்டியிலும் வெல்லாத அணியாக இருந்த கிரீஸ் இப்போட்டி துவங்கும்போது 150-1 என்ற சதவீதத்தில் வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்டது.

மன வலிமையுடன் போராடி காலிறுதியில் நடப்பு சாம்பியன் ஃபிரான்ஸையும், அரையிறுதியில் செக் குடியரசையும் வென்று இறுதிக்குள் நுழைந்த கிரீஸ் சாதித்தது, உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.



வேஷம்



சுபாஷுக்கு வேட்டையாடுவ தென்றால் மிகவும் பிடிக்கும். ஒரு நாள் அதிகாலை சோற்றைக் கட்டிக் கொண்டு காட்டுக்குப் போனான்.

திடீரென தூரத்தில் புலியின் உறுமல் கேட்டது. சரசரவென்று அருகிலுள்ள மரத்தில் ஏறினான் சுபாஷ். வசதியான கிளைகளின் சங்கமத்தில் அமர்ந் தான். புலி ஒரு மனிதனைத் துரத்திக் கொண்டு வந்தது. குதிகால் பிடரியில் பட ஓடி வந்த அந்த மனிதனின் நிலை சுபாஷின் மனதை இளக்கியது.

புலி பாய்வதற்காகத் தாமதித்த

குதிரை!

மாலதி

நொடியில் வில்லில் பூட்டியிருந்த பாணத்தை விடுவித்தான். சரியான இடத்தில் பாய்ந்த அம்பு, புலியைச் சாய்த்தது. புலியின் மரண ஓலம் ஓடி வந்த மனிதனைத் திரும்பி அம்பெய்தவனைத்தேட வைத்தது.

"மிக்க நன்றி, தம்பி" என்று கண்களில் நீர் கசிய கை குவித்தான். மரத்திலிருந்து குதித்தான் சுபாஷ். "தம்பி! சூரியன் அஸ்தமனமாயிடுச்சே, எப்படி வீட்டுக்குப் போவீங்க? எங்கூட எங்க வீட்டுக்கு வந்து சாப்பிட்டு, ராத்திரிக்குத் தங்கிட்டு காலையிலே உங்க வீட்டுக்குப் போகலாம்" என்றான் ஓடிவந்தவன்.



சுபாஷுக்கும் மறுத்துப் பேச வழி இல்லாததால் புதியவனைப் பின் தொடர்ந்தான். வீடு வந்ததும் "தம்பி, என் பேர் ரத்னம். குதிரை வியாபாரம் பார்க்கறேன்" என்றவன், பின்பக்கமிருந்த குதிரைக் கொட்டடிக்கு அழைத்துச் சென்று காண்பித்தான். ஆயிரக் கணக்கான குதிரைகள் நின்றிருந்தன.

"கல்யாணி! என்ன பார்க்கிறே? தம்பிக்கு ரொம்ப நல்ல மனது. என்னைப் புலி சம்காரம் பண்ணாமக் காப்பாத்திட்டான்" என்று அருகிலிருந்த குதிரையிடம் சொன்னான்.

பிறகு உள்ளே அழைத்துச் சென்று உணவு கொடுத்து, படுக்கையும் தயாரித்தான்.

"நிம்மதியாய் உறங்கு" என்று தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றான். நாள் முழுவதும் காட்டில் திரிந்ததால் சுபாஷ் காலையில் வெகுநேரம் தூங்கினான். விழித்ததும் ரத்னத்தைத் தேடினான். ஒரு வேளை குதிரை லாயத்தில் இருப்பானோ என்று அங்கு சென்றான். ஒவ்வொரு குதிரையும் பார்க்க அழகாக இருந்தது. பார்த்துக் கொண்டே வரும்போது ஒரு வெள்ளைக் குதிரை, நெற்றியில் திலகம்போல் அரக்கு நிறம் கொண்டது.

"இரக்கமனமுள்ளவனே! ரத்னம் உனக்கு ஒரு குதிரையைப் பரிசளிக்கப் போவதாகக் காலையில் கூறினார். நீ என்னைக் கேள். அதனால் நீ சாதனையாளனாவாய்" என்றது.

சுபாஷ் பிரமித்திருந்தான். குதிரை பேசுகிறதே, என்று! "தம்பி! இங்கிருக்கிறீயா? வா, குளிச்சு சாப்பிட்டுட்டு கிளம்பலாம். அப்பா, அம்மா தேடுவாங்கல்லே! எனக்கு உயிர் தானம் கொடுத்த

உனக்கு ஒரு குதிரையை வெகுமதியாய் தரப் போறேன். எது வேண்டும், சொல்லு" என்றான்.

சுயநினைவுக்கு வந்த சுபாஷ் "இது வேண்டும்" என்று பேசிய குதிரையைக் காட்ட, "நல்ல தேர்வு. அதையே தருகிறேன்" என்றபடி முகமன் கூறி அனுப்பி வைத்தான்.

ரத்னத்தின் வீடு பார்வைக்கு மறைந்ததும், "எஜமானே! எங்கு செல்கிறோம்?" என்று கேட்டது குதிரை.

"வீட்டுக்குத்தான்" என்றான் சுபாஷ்.

"வீட்டிற்குப் போய் என்ன செய்யப் போகிறீர்கள்? நண்பரே! சாதிக்க வேண்டாமா? நாடுகளைக் காணலாம். என் ஆற்றலைக் கொண்டு புகழ் பெறுங்கள்" என்றது குதிரை.

சுபாஷுக்கு அந்த யோசனை பிடித்துப் போகவே மாளவம், கூர்ஜரம் என்று பயணப்பட்டான். குதிரை கேட்பவரின் வினாக்களுக்குப் புத்திசாலித்தனமாகப் பதில் கூறியது. இதைக் கேள்விப்பட்ட ஒரு சிற்றரசர் அதை விலைக்குக் கொடுக்கும்படி கேட்டார்.

"நாளை முடிவு சொல்கிறேன்" என்று அவரை அனுப்பிய சுபாஷ், இருப்பிடம் வந்ததும் குதிரையிடம் "உன்னைப் பிரிய என்னால் ஆகாது. இரவோடு இரவாக ஊரை விட்டு ஓடி விடுவோம், வா" என்றழைத்தான்.

"எஜமானே! நாமென்ன கள்ளர்களா, ஊரை விட்டு ஓட? என்னைக் குதிரைகளின் தலைவனாக்கு. உனது கிழட்டுக் குதிரைகளையும், நோயுற்ற பரிகளையும் ஆரோக்கியமாக, இளமையாக மாற்றுகிறேன் என்று அரசனிடம் சொல்லுங்க" என்றது குதிரை.

"அதெப்படி முடியும்? பொய் சொன்னால் தண்டனை கிடைக்கும்" என்றான் சுபாஷ்.

"உண்மையாகத்தான் கூறுகிறேன். நான் தும்மிய நீர்த் துளி தெளித்தால் குதிரைகளின் நோய்கள் குணமாகும். வயோதிக அஸ்வங்கள் வாலிபமாகிவிடும்" என்றது குதிரை.

"அட, அப்படியா? இன்னும் என்னவெல்லாம் அபூர்வ சக்திகள் வைத்திருக்கிறாய்?" என்று ஆச்சரியப்பட்டான் சுபாஷ்.

"போகப் போகத் தெரிந்து கொள்ளலாம்! நிம்மதியாய் தூங்கு" என்றது குதிரை. மறுநாள் மன்னர் வந்தார். சுபாஷ் சொன்னதைக் கேட்டதும் வியந்தார். குதிரை லாயத்துக்குக் கொண்டு போய் வெள்ளைக் குதிரையைத் தும்மச் சொன்னான் சுபாஷ். என்ன அற்புதம்! கிழட்டுக் குதிரைகள் இளமை பெற்றன. நோய் நீங்கிய குதிரைகள் கம்பீரமாகக் கனைத்தன.

சுபாஷை குதிரைகளின் தலைவனாக்கினார் வேந்தர். பழைய தலைவனுக்கு சுபாஷின் மேல் எரிச்சலாக வந்தது.

"அரசே! உங்களது பட்டத்துக் குதிரையை சுபாஷின் குதிரை கண்டுபிடிக்கும் ஆற்றலுடையது. பல போர்களில் வெற்றியைத் தேடித் தந்த ராசியான குதிரையாயிற்றே! அதன்மீது எத்தனை பிரியம் வைத்திருந்தீர்கள்?" என்றெல்லாம் தூபமிட்டான்.

அரசரும் சுபாஷை அழைத்து பட்டத்துக் குதிரையைத் தேடிப் பிடிக்கும்படி கட்டளையிட்டார். சுபாஷ் கவலையோடு லாயத்துக்குப் போனான்.

காரணத்தைக் கேட்ட குதிரை, "இவ்வளவுதானா? அருகிலுள்ள சைந்த மலையில் ஒரு நதி ஓடுகிறது. அங்கு செல்வோம். நான் கனைப்பேன். நதியிலிருந்து ஒரு பரி வரும்.

நாளை நல்லது செய்வேன் என்பவன் முட்டாள். அறிவாளி நேற்றே அதை செய்திருப்பான்.


- மார்ஷல்



தொகுப்பு:
கே. செந்தில் குமார், நல்லூர்

அதை நிராகரித்து விடு. மறுபடி பாடுவேன். அடுத்து இன்னொரு குதிரை வரும். அதையும் ஒதுக்கிவிடு. மூன்றாவதாக 'அஸ்வாதி சயமே வா' என்றழைப்பேன். பட்டத்து குதிரை வரும். அதற்குக் கடிவாளமிட்டு என்னோடு இணைத்து விடு. என் சக்தி அதன் தேகத்துக்குள் பரவும்.

''மந்திரவாதியால் ஏவப்பட்ட ஒரு கருடன் அதை வருண லோகத்தில் அடைத்து வைத்திருக்கிறது. குதிரை வெளிப்பட்டதும் கருடன் நம்மைத் துரத்தும். மன்னரிடம் நிறைய சாளக் கிராமங்களை வாங்கி வைத்துக்கொள். கருடன் நெருங்கும் போதெல்லாம் ஒரு சாளக் கிராமத்தை வீசு. சாளக் கிராமம் பெருமானின் வடிவம். திருமாலின் வாகனமான கருடனின் கோபம் அதைக் கண்டதும் அடங்கும். மறுபடி விரட்டும்போது மீண்டும் சாளக்கிராமத்தை வீசு. நகர் எல்லையை மிதித்துவிட்டால் கருடன் துரத்தாது திரும்பிச் சென்று விடும்'' என்று விபரமாகச் சொன்னது.



அதே போலச் செய்து பட்டத்து குதிரையை மீட்டு வந்தான் சுபாஷ். அரசர் கொடுத்த மரியாதையும், வெகுமதிகளும் மீண்டும் தலைமைக் காரியைப் பொறாமைப்பட வைத்தது.

''அரசே! தாங்கள் தொலைந்து போன ராஜகுமாரியைக் கேட்பீர்களென சுபாஷ் நினைத்தானாம்! தாங்களோ அல்பமாகக் குதிரையைக் கேட்டு விட்டீர்களாம்! கர்வத்தோடு பீற்றிக் கொள்கிறான்'' என்று கோள் மூட்டினான்.

அரசர் சுபாஷை அழைத்து இளவரசியைத் தேடிக் கண்டுபிடிக்க உத்தரவிட்டார். மறுபடியும் தன் அன்புக் குதிரையிடம் புலம்பினான் சுபாஷ்.

''கவலைப்படாதே! நாளை மறுநாள் சந்திர கிரகணம். கிரகண வேளையில் நான் ஆற்றில் முழுகுவேன். வெளியே வரும் போது ராஜகுமாரி இருப்பாள். நீ கரையில் நின்றபடி வருண ஜபம் செய்து கொண்டிரு'' என்றது பரி.

மூன்று நாட்களுக்கு குதிரைக்கும் தனக்கும் உணவு எடுத்துக் கொண்டு புறப்பட்டான் சுபாஷ். சந்திர கிரகணத்தன்று நீரில் குதிரை இறங்குவதைக் கண்ட சுபாஷ் கண்ணீர் பெருக்கினான். எல்லாம் நல்லபடியாக வேண்டுமே! 'இப்படியே ஓடி விடலாம் என்றாலும் இந்த அதிகப்பிரசங்கி கேட்க மாட்டேனென்கிறதே' என்று வருந்தினான்.

கிரகணம் விட்டு பூரண சந்திரன் ஆகாயத்தில் பிரகாசமானதும் நதி நீரிலிருந்து ஓர் அழகிய மங்கை வெளி வந்தாள்.

''அன்பரே! நான்தான் உமது பரிசான குதிரை. என்னைக் கடத்திச் சென்ற மந்திரவாதி எனக்குச் சில அபூர்வ சக்திகளை அளித்திருந்தான். அவனுக்கு நான் இணங்காததால் என்னைப் பரியாக்கி விட்டான். ஒரு நாள் அவனை ஏமாற்றி நான் ஓடிப்போய் குதிரைக் கூட்டத்தில் சேர்ந்து விட்டேன். ஓடிப்போவது கஷ்டங்களுக்கு நிவாரணமல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். கருணை மனம் கொண்ட உங்கள் பின் வந்தேன். பட்டத்து குதிரையைக் கவர்ந்து வந்து ஒளித்து வைத்ததை நான் அறிவேன். அதுதான் மந்திரவாதி இறந்ததையும் நான் மீண்டும் பெண்ணாகும் வழியையும் சொல்லிக் கொடுத்தது. நீர்தான் குதிரை பாஷை அறியாதவராயிற்றே! பழைய தலைவனால் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலாயிற்று. சந்திர கிரகணமும் வந்தது. வாருங்கள் ஊர் செல்லலாம்'' என்றாள்.

நாடு திரும்பி தந்தையிடம் நடந்ததையெல்லாம் சொன்ன ராஜகுமாரி சுபாஷை மணந்து கொண்டாள்.

கொட்டும்




முதல் பரிசு:
டி. தீப்தி திவ்யா,
ஏழாம் வகுப்பு,
தேவி மெட்ரிக் பள்ளி,
பழனி





இரண்டாம் பரிசு:
க. கார்த்திகேயன் சபரி,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலயா, கோவை



அருவி!

வண்ணத் தூரிகை முடிவு

ஜூலை இதழில் 'அருவி' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



மூன்றாம் பரிசு:

எஸ். ஸ்ரீவித்யா,
ஒன்பதாம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

ஆறுதல் பரிசு:

ப. ஓவியா,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



ஆறுதல் பரிசு:

கா. முகமது அலி ஜின்னா,
கோவை



மந்திர விதைகள்!

கதை: ஸ்ரீரா. இரவிவர்மன்
படம்: சேகர்




பத்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்!






விடைகள்:

1. ஐஸ்கிரீம் படம் 2. மிக்கியின் ஷூ 3 மிக்கியின் டிரெஸ் 4. கட்டடத்தின் கூம்பு
5. மரங்கள் 6. கூடை 7. நாயின் காது 8. மின்னி ரிப்பன்
9. வண்டிச் சக்கரம் 10. தரையில் கற்கள்



குதிரைக்குப் பயங்கரப் பசி!
கேரட்டை எடுக்க
கொஞ்சம் உதவுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

